Regd No M. 4900 16-பக்கங்கள்.

குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 ஈரோடு 1-1-1949 சனிக்கிழமை மலர் 17.

★

கும்பகோணம் போராட்டம்.

★

உரிமைப் போராட்டத்தை நிறுத்தவேண்டுமென்று, தஞ்சையில் **28-12-48**ம் நாள் கூடிய நிர்வாகக் கமிட்டி முடிவு செய்தது. அதையொட்டி **29-12-48**ல் தலைவர் பெரியாரவர்கள் கொடுத்த அறிக்கை:—

கும்பகோணத்தில் சர்க்காரால் திராவிட கழகப் பிரசாரத்தைத் தடுப்பதற்காக அநீதியாகப்போடப்பட்ட 144-அய் எதிர்த்து நடத்திய போராட்டத்தை 19-ந்தேதி முதல் 25-ந் தேதி வரை கடுமையான தடியடிப் பிரயோகத்தால் நிறுத்த சர்க்கார் முயற்சி செய்து பார்த்தும், அம்முயற்சி அவர்களுக்குப் பயன்படாமல் மேலும் மேலும் போராட்டம் மக்களுக்குள் வேகத்தையும் உணர்ச்சியையும், ஊக்கத்தையும் கொடுத்துத் தொடர்ந்து நடந்து வந்ததால் 26-ந் தேதி முதல் சர்க்கார் தடியடியை நிறுத்திக் கொண்டதோடு உத்திரவை எதிர்த்தவர்களையும் எதிர்ப்புக்கு ஏற்பட்ட சட்ட நிபந்தனைப்படி அரஸ்டு செய்யாமலும் விட்டு விட்டதால், இனி அங்கு போராட்டம் தேவை இல்லை என்று கருதி போராட்டத்தை நிறுத்தி விடலாம் என்று 28ந்தேதி கூடிய திராவிட கழக மத்திய நிர்வாகக் கமிட்டி முடிவு செய்திருக்கிறது. நாளையோடு நிறுத்தப்பட்டு விடும்.

ஆகவே கும்பகோணத்துக்கு வெளியூரிலிருந்து வந்த தொண்டர்கள் அருள்கூர்ந்து அவரவர்கள் ஊருக்குச் சென்றுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

—ஈ. வெ. ராமசாமி.

★

★ மதிவிலக்கா ? ★

★

எந்த நாட்டிலும் அலுவலகங்களுக்கும் மற்றும் தொழில் நிலையங்களுக்கும் பொது விடுமுறைநாட்கள் உண்டு. நாட்டைச் சீர்திருத்தி நல்ல முறையிலே செலுத்திய பெரியார்களது நினைவுநாட்களைக் கொண்டாடுவதும், அதன் மூலம் அவர்களது பெயர்களுக்கும் தங்கள் நாட்டின் பெயருக்கும் பெருமை தேடிக் கொள்வதும், அவர்களது நினைவின் விளைவாகத் தீய வாழ்வினரும் தூயவாழ்வு மேற்கொள்ளும்படியான நிலையை ஏற்படுத்துவதும், அந்த நன்னாட்களைப் பொன்னாட்களாகப் போற்றுவதும் மக்கள் இயற்கையாக விரும்பிச் செய்யும் செயல்களாகும். மேலும் வரலாற்றிலே இடம் பெற்ற முக்கிய சம்பவங்களை முன்னிட்டு விழாக்கூட்டுவதும் மக்களால் விரும்பப்படுவதொன்றாகும். இவைகளுக்காகவும் இன்ன பிற சிறப்புத் தரப்படத் தகுதியான நிகழ்ச்சிகளுக்காகவும் அரசினர் விடுமுறையளிப்பது வழக்கம்.

உதாரணமாக, அமெரிக்காநாட்டிலே ஒவ்வொரு ஆண்டும் பொது விடுமுறை நாட்களாகக் கொள்ளப்படும் தினங்களைப் பார்த்தால் இவ்வுண்மை விளங்கும்.

ஜன 1. ஆண்டுப் பிறப்பு
பிப் 12. லிங்கன் பிறந்த நாள்
,, 14. தூய வேலன்டைன் தினம்
,, 22. வாஷிங்கடன் பிறந்த நாள்
மே 2. வது ஞாயிற்றுக்கிழமை—அன்னை தினம்
,, 30. நினைவு நாள்.
ஜூன் 14. கொடி தினம்
ஜூலை 4. சுதந்திரதினம்
செப் முதல் திங்கட்கிழமை—தொழில் தினம்
அக் 12. கொலம்பஸ் நாள்
,, 31. ஹாலோவீன்
நவ முதல் செவ்வாய்—தேர்தல் நாள்
,, 11. சமாதான நாள்
கடைசி வியாழன்—நன்றி செலுத்தும் நாள்.
டிச 25. கிருத்துமஸ்

மாக்களை யொத்து மக்களையும் விலங்கு பூட்டி, விலைக்கு வாங்கி, வேலை பெற்று வந்த அநாகரீக வழக்கத்தை ஒழித்து, அடிமைத் தளையை அறுத்தெறிந்த ஆபிரகாம் லிங்கனையும், மக்களாட்சி மலரச் செய்த, அமெரிக்காவின் முதல் ஆட்சித் தலைவன் (பிரசிடெண்ட்) வாஷிங்டனையும், புது உலகமென்றழைக்கப்படும் அமெரிக்க நாட்டை பழைய உலகத்திற்கு முதன் முதலாக அறிமுகப்படுத்திய கொலம்பஸையும், காட்டுமிராண்டி வாழ்வு வாழ்ந்து, கண்டவை, கேட்டவை யெல்லாவற்றையும் கண்மூடித்தனமாகக் கடவுளென வணங்கி வந்த மக்களை உருவமற்ற ஒரு பொருளை வணங்கவைத்து, அவர்களை ஒன்று திரட்டி நல் வாழ்வுப்பாதை காட்டி அதற்காகவே உயிரீந்த இயேசு கிறிஸ்துவையும் அந்நாட்டு மக்கள் மறவாது நன்றி செலுத்து முகத்தான் அவர்களது பிறந்த நாட்களைக் கொண்டாடி வருகின்றனர். அதே போன்று வரலாற்றுச் சிறப்புப் பெற்ற சுதந்திர தினம், தேர்தல் தினம், போர்க் கொடுமை யொழிந்து சமாதானம் நிலவிய நாள், கொடி தினம் முதலியவற்றையும், மற்றும் ஆண்டுப் பிறப்பு, தொழில் தினம் முதலியவற்றையும் விழாக் கொண்டாடிச் சிறப்பிக்கின்றனர்.

ஏன் நம் நாட்டில் என்ன அப்படிப் பட்ட, நாட்டைக் கேட்டினின்றும் திருப்பி நல் வாழ்வமைத்த நல்லோர்கள் இல்லையா, அவர்களுக்கு விழாக் கொண்டாடப்படுவதில்லையா எனக் கேட்கத் தோன்றலாம். நலம் பல புரிந்தோர் ஏன் இல்லை, உலகிற்கே பொதுமறை வகுத்த, இலண்டன் மாநகரிலுள்ள மிகப்பெரும் நூல் நிலையத்திலே பைபிளுக் கடுத்து இடம் பெற்றிருக்கும் உயர்ந்த குறளைத் தந்த திருவள்ளுவர் இல்லையா? சிலப்பதிகாரம் என்னும் சிறந்த இலக்கியம் தீட்டிய இளங்கோ அடிகள் நினைவு நாள் கொண்டாடக் கூடாதா? உடன் பிறந்தோன், கணவன் முதலானோர் முன் தினப்போரில் இறந்துபட்டும் மன உறுதி குன்றாது, "சென்று வா நீயும், வென்று திரும்பு பகைவரை" என்று தன் சிறு மகனையும் வேல்கை கொடுத்துச் செருமுனை அனுப்பிய அன்னையையும், "களத்திலே, எனது மகன் முதுகில் புண்பட்டிருந்தால் அவனுக்குப் பாலூட்டிய என் மார்பை அறுத்தெறிவேன்" என வீர உரை புகன்ற தாய்மார்களையும் சிறப்பிக்க அன்னை தினம் கொண்டாடினால் தாழ்வுற்றிருக்கும் நம் சமுதாயப் பெண்கள் வாழ்வுபெறமாட்டார்களா? நாட்டைக் காக்க இளைஞர்களும் சீறி எழமாட்டார்களா? என்று கேட்பர் மதிமிக்கோர்.

அவ்வளவென்ன, நம் காலத்திலே வாழ்ந்த, ஆங்கிலேயருடன், ஆங்கிலேய ஆட்சியின் கீழேயே போட்டியிட்டுப் பண்டைத் தமிழரின் பிரதிநிதியாகத் திகழ்ந்த கப்பலோட்டிய வீரன் சிதம்பரத்தின் நினைவு நாள் கொண்டாடப் படுவதில்லையா, அதற்கெனத் தேசீய அரசாங்கம் நிச்சயம் விடுமுறை அளித்திருக்க வேண்டுமே, என்றெல்லாம் கேட்கத் தோன்றும், தமிழ்ப் பற்றும் தன்மானப் பற்றும் நிறைந்தோர்க்கு. விடப்பட்டிருக்கிறது விடுமுறை. இதோ, மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் நடைபெறும்

தென்னிந்திய ரயில்வேயில் 1949ம் ஆண்டுக்கென வெளியிடப்பட்டிருக்கும் விடுமுறை நாட்களின் பட்டியலைப் பாருங்கள்:-

ஜன. 1 புது வருடப் பிறப்பு
,, 10 வைகுந்த ஏகாதசி
,, 12 மீலாடி நபி
,, 13 போகி
,, 14 பொங்கல்
,, 15 மாட்டுப் பொங்கல்
பிப்.25 மகாசிவராத்திரி
மார்.30 தெலுங்கு வருடப் பிறப்பு
எப்.13 தமிழ் வருடப் பிறப்பும் சந்திர கிரகணமும்
,, 15 நல்ல வெள்ளிக்கிழமை
ஜூன்10 மன்னர் பிறந்த நாள்
ஜூலை1 பாங்கி அரை வருடக் கணக்குத் தீர்ப்பு
,, 28 ரம்ஜான்
ஆக. 9 ஆவணி அவிட்டம்
,, 15 சுதந்திர தினம்
,, 18 ஸ்ரீஜயந்தி
,, 27 விநாயக சதுர்த்தி
செப்.22 மகாலய அமாவாசை
29,30,31 ஆயுத பூஜை, 3 நாட்கள்
அக். 4 பக்ரீத்
,, 7 சந்திரகிரகணம்
,, 20 தீபாவளி
நவ. 3 மொகரம்
டிச.26 கிறிஸ்துமஸ்
,, 30 வைகுண்ட ஏகாதசி
,, 31 பாங்கி ஆண்டுக்கணக்குத் தீர்ப்பு.

இந்தப் பட்டியலை முன் கொடுக்கப்பட்ட அமெரிக்காநாட்டு விடுமுறை விவரத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அமெரிக்காவின் முற்போக்கிற்கும் இந்தியாவின் தாழ்ந்த நிலைக்கும்காரணம் இதிலிருந்தே ஒருவாறு விளங்கும். வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் விடப்படாத போகிக்கும் மாட்டுப் பொங்கலும் சுதந்திர ஆட்சியில் விடுமுறை கொடுக்கப்படுகிறது. ஒரே நாள் ஆயுத பூஜை மூன்று நாளாக விரிந்து விட்டது. இதுவரை சூரிய கிரகணம் ஏற்பட்டால் மட்டும் லீவ் விடப்பட்டு வந்தது. 1949ம் ஆண்டில் சந்திர கிரகணத்துக்கும் விடுமுறையளிக்க ஏற்பாடாகி விட்டது. சூரிய கிரகணத்துக்கு விடுமுறை விட்டு வந்ததே காட்டு மிராண்டிக் கால அறிவின் விளைவாகும். யாரும் கேட்காமலே

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

காட்சி 17.

[வீதி.]

உறுப்பினர்:- ஆடிட்டர், இரஞ்சன், இராகவன்.

கதை அமைப்பு:-[இராஜன் மீது திருட்டுக் குற்றம் சுமத்த விஸ்வனுடைய நண்பர்கள் திட்டம் தீட்டுகின்றனர்.]

ஆடிட்டர்:-[எதிரில் வரும் இரஞ்சன், இராகவன் இருவர்களையும் நோக்கி]

என்னப்பா! எங்கு பார்த்தாலும், நீங்கள் இருவரும் சதா ஒருவரை விட்டொருவர் பிரியாமலே கூடித்திரிகிறீர்களே! உங்களுக்குள் ஏதாவது கூட்டுறவுத் திட்டம் ஏற்பட்டிருக்கிறதா...?

இரஞ்சன்:-ஆடிட்டர் சார்! ஏன் எங்களைப் பார்த்ததுமே இந்த மாதிரிக் கேட்கிறீர்?

இராகவன்:-அப்படித்தான் எங்கெங்கெல்லாம்எங்களைப்பார்த்து விட்டீர்?

ஆடிட்டர்:-எல்லாம் உங்களுடைய நன்மைக்காகத்தான்! நேற்று விஸ்வனுடைய கலியாணக்கச்சேரி நடந்ததே...? அங்குகூட இருவரும் சேர்ந்தாற்போல்தானே வந்தீர்கள்?

இரஞ்சன்:- ஆமாம்! அதனாலென்ன?

இராகவன்:-ஏன் எங்கள் இருவரையும் சேர்ந்தாற்போல் பார்ப்பதென்றாலே உமக்குப் பிடிக்கவில்லையா?

ஆடிட்டர்:-சேச்சே...! அதெல்லாம் ஒன்றுமில்லேப்பா! எதிலும் இரண்டு பேர்! கூட்டாளியாக இருக்கலாம்...ஆனால்! நல்லவனும், கெட்டவனுமாகவோ...? யோக்கியனும், அயோக்கியனுமாகவோதானிருக்கவேண்டும். அப்படியானால்தான் இருவரில் ஒருவன் திருந்தலாம் அல்லது ரெண்டு பேருமே கெட்டுக்குட்டிச்சுவராகவாவது போகலாம்! அப்படியில்லாமே நீங்க ரெண்டு பேருமே அயோக்கியர்களாக இருக்கிறீர்களே...! எப்படி உருப்படப் போகிறீர்களோ...? என்றுதான் யோசிக்கிறேன்?

இரஞ்சன்:-என்ன! அயோக்கியர்களா இருக்கிறோமா...?

ஆடிட்டர்:-ஆ...ங்! யோக்கியர்களாக இருக்கிறீர்கள் என்றல்லவா சொன்னேன்!

இராகவன்:-பார்த்தீரா மறுபடியும் அந்த 'அ'வைச் சேர்த்துத்தானே சொல்கிறீர்.

ஆடிட்டர்:-'அ' வா! அகரம் எழுத்துக்கெல்லாம் ஆதியாச்சே...! அதை உச்சரிக்காமலிருக்க முடியுமா? சரி! இப்போது நீங்கள் எங்கே போய்க்கொண்டிருக்கிறீர்கள்.

இராகவன்:-ஆங் யோக்கியர்களாவதற்கு!

ஆடிட்டர்:-யாரிடம்?

இரஞ்சன்:-விஸ்வனிடம்!

ஆடிட்டர்:-நல்ல இடந்தான்! ஆனால், இன்றைக்குப் போகவேண்டாம்ப்பா! நேற்றுத்தானே கலியாணம் நடந்தது! நாளைக்கு ஆபீசுக்கு வருவான் அங்கேயே சந்தித்துக் கொள்ளலாமே!

இரஞ்சன்:-ஆமாம். அதுவும் நல்ல யோசனையேதான்! சரி. நீர் சப் இன்ஸ்பெக்டரிடம் எச்சரிக்கை செய்து விட்டீரா...?

ஆடிட்டர்:-ஓ! எல்லா வேலையும் முடிந்து விட்டது! நாளைக்கு விஸ்வன் தலையில் போடவேண்டியதுதான் கல்லை.

இராகவன்:- விஸ்வனா...? ராஜன் என்று சொல்லும்!

ஆடிட்டர்:-ராஜனா...? என்னப்பா அது எல்லாம் தலைகீழ்ப்பாடமாயிருக்கே! ராஜன் தானேப்பா அந்த பிளாக் மார்க்கட் பேர விவகாரங்களைக் கண்டுபிடிக்குமாறு கணக்குப் புத்தகங்களை எல்லாம் என் ஆபீசுக்கு அனுப்பியிருக்கிறான்...?

இரஞ்சன்:-அடடே...! விஷயம் விபரீதமாகப் போய் விட்டதே. அந்தக் கணக்கு விவரம் ராஜன் கைக்கு எப்படிக் கிடைத்தது...? அய்யய்யோ! விஸ்வனே அல்லவா மாட்டிக் கொள்வான் போலிருக்கு...?

ஆடிட்டர்:-ஆ...ங்! அதெல்லாம் ஒன்றும் கவலைப்படாதேப்பா! எல்லாம் என் கையில்தானே இருக்கு! உம் நீயாரை மாட்டிவைக்கணும்னு சொல்றியோ அவனையே மாட்டி வைக்கலாம்! ஆனால்...சிரமத்திற்குத் தகுந்தபடி என்னைக் கொஞ்சம் அதிகமாகக் கவனித்துக் கொள்ளவேண்டும்! அவ்வளவுதான்.

இராகவன்:- ஓ! அதெல்லாம் விஸ்வன் தாராளமாகக் கொடுப்பானப்பா! நீர் எப்படியும் இந்த பிளாக் மார்கட் விஷயத்தில் ராஜனைத்தான் மாட்டி வைத்துவிடவேண்டும். தெரிகிறதா?

இரஞ்சன்:- ஆமாம்ப்பா! அப்படித்தான் செய்யவேண்டும்!

ஆடிட்டர்:-ஆகா...! நாளையே எல்லாம் ரெடியாச்செய்துமுடித்து விடுகிறேன். அவ்வளவுதானே!

இரஞ்சன்:-ஆமாம் அவ்வளவுதான்! வாருங்கள் போகலாம்!

[மூவரும் சேர்ந்து செல்கின்றனர்]

காட்சி 18.

[மில்லாபீஸ்]

உறுப்பினர்:- விஸ்வன், இரஞ்சன், இராகவன், ஆடிட்டர், சப்-இன்ஸ்பெக்டர், போ

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

கதை கற்பனை.

சிறுகதை

மூன்றாம் பருவம்

தேவி பிரசாதம்!

போட்டி

எண் 3.

"என்னை அவமானப் படுத்திவிட்டான் பூசாரி. தன் சொந்தக்காரன் என்பதற்காக அந்த அன்னக்காவடிக்கு அவன் எப்படி முதலில் பிரசாதம் கொடுக்கலாம்?" என்று ராமலிங்கம் கூறியதை அருணாசலத்திற்கு எவனோ தெரிவித்து விட்டான். அவ்வளவு தான். அருணாசலம் முதல் நாள் காளிகோவிலில் பூசாரி சாமியாடியதை விட ஒருபங்கு அதிகமாகவே ஆடத் தொடங்கினார். "அன்னக் காவடி என்று சொன்ன தடியனின் மண்டையை உடைத்தாலென்ன?" என்று கர்ஜனை செய்தார். அருணாசலத்தின் இந்த கர்ஜனை எப்படியோ ராமலிங்கத்தின் காதுகளுக்கும் எட்டியது. எப்படி எட்டியிருக்கப்போகிறது? 'இழுத்துவிட்டு வேடிக்கை பார்க்கும்' சிறந்த குணமுடைய பெரிய மனுஷர்களின் கைங்கரியமாகத்தானிருக்கும்!

*   *

நடந்தது என்னவோ இதுதான். வருடா வருடம் காளிகோவிலில் பெரிய விழா நடைபெறும். அப்போது ராமலிங்கம் குடும்பத்தாருக்குத்தான் தேவியின் பிரசாதம் (பொங்கல், சுண்டல் வகையரா) முதலில் கொடுக்கப்படுவது வழக்கம். ராமலிங்கத்தை விட பணபலம் அதிகமிருந்த காரணத்தால் அந்த வழக்கத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து தேவியின் பிரசாதத்தை முதலில் தான் பெறுவதன் மூலமாகத் தன் குடும்பத்திற்குப் பெருமையைத் தேடி வைக்கத் திட்டமிட்டார் அருணாசலம். காளிகோவில் பூசாரியும் அவருடைய திட்டத்திற்கு இணங்கினான்—அருணாசலம் தன்னுடைய நெருங்கிய சொந்தக்காரர் என்ற காரணத்தோடு ஆயிர ரூபாய் ரொக்கமாகக் கிடைத்த காரணத்தால்!

விழாவின் போது தேவிக்குப் பூஜை முடிந்த பிறகு, பிரசாதம் கொடுக்கப் போகும் சமயத்தில் திடீரென்று பூசாரியின் மீது தேவி வந்துவிட்டாள்! ராமலிங்கத்தின் மகன் சோமசுந்தரம் டைபாயிடினால் கஷ்டப்பட்ட பொழுது, ராமலிங்கம் தனக்கு நூறு ஆடுகள் வெட்டுவதாக வாக்களித்ததாகவும் அதைக் குறித்த காலத்தில் நிறைவேற்றாததால் தன்னுடைய பிரசாதத்தை இனி அவருக்கோ அவருடைய குடும்பத்தாருக்கோ முதலில் கொடுக்கும் வழக்கத்தை நிறுத்திவிட்டு, தன்னுடைய பரிபூரண அன்பிற்குப் பாத்திரரான அருணாசலத்திற்கே இனிமேல் முதலில் பிரசாதம் வழங்கப்பட வேண்டுமென்றும் தேவி கூறிவிட்டாள்!

தான் தேவிக்கு ஆடுகள் வெட்டுவதாகப் பிரார்த்தனை செய்துகொள்ளவே இல்லையென்றும், பூசாரிக்கு வந்த சாமி நிசசாமி அல்லவென்றும் வாதாடினார் ராமலிங்கம். "சாமி மீதே நம்பிக்கை இல்லாத பேர்வழிகளுக்குக் கோவிலில்என்ன வேலை?" என்று ஒரு போடு போட்டார் பூசாரி. ஆகவே ராமலிங்கம் கோபமாகக் கோவிலை விட்டே வெளியேறும்படி நேர்ந்துவிட்டது.

> பரிசு பெற்றவர்.
>
> "விவேகமறிந்த வீரனின் மனைவி" என்னும் கதையினை எழுதிய தோழர்
>
> **டி. வி. இராமசிவம்**
>
> கர்ணம், பெரப்பூர்,
> (வயா) நீடாமங்கலம்.
>
> பரிசுத்தொகை ரூ. 50
> 31-12 48ம் நாளில்
> செக்கின் மூலம்
> அனுப்பப்பட்டது.

*   *

ராமலிங்கத்தின் மனதிலே இருந்த ஆத்திரத்தை இன்னும் அதிகமாக்கியது, "அன்னக் காவடி என்று சொன்ன தடியனின் மண்டையை உடைத்தாலென்ன?" என்று அருணாசலம் கூறியது. "அவனுக்கு அவ்வளவு தைரியமா? பார்க்கிறேன் ஒருகை" என்று ஒரு தடியுடன் கிளம்பினார். அவர் மகன் சோமசுந்தரம் எவ்வளவோ தடுத்தும் பயனில்லை.

"மண்டையை உடைக்கிறேன் என்று சொன்ன பயலுக்குத் தைரியமிருந்தால் வெளியே வரட்டும்" என்று அருணாசலத்தின் வீட்டின் முன் நின்று சப்தம் போட்டார் ராமலிங்கம். வீட்டினுள்ளிருந்து வெளியே வந்தார் அருணாசலம். "மரியாதையாகப் பேசு. பயல் என்று இன்னொரு தடவை சொன்னாயோ பல்லை உடைத்துவிடுவேன், ஜாக்கிரதை" என்றார் அருணாசலம்.

ராமலிங்கத்தால் அதற்கு மேல் பொறுமையாக இருக்க முடியவில்லை. கையிலிருந்த தடியை வீசி எறிந்தார். அதன் முனை அருணாசலத்தின் நெற்றியில் பட்டு காயத்தை உண்டாக்கியது. மறுகணம் அருணாசலம் ராமலிங்கத்தின் மீது பாய்ந்தார், இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியைக் கையில் ஓங்கிக் கொண்டு. "அப்பா வேண்டாம். வேண்டாம்" என்ற சப்தம் வீட்டினுள்ளிருந்து வந்தது. அதே சமயம் சோமசுந்தரம் இருவருக்குமிடையே பாய்ந்தான். ஆகவே, ராமலிங்கத்தின் உடலில் பாய இருந்த கத்தி சோமசுந்தரத்தின் உடலில் பாய்ந்தது.

*   *

"சோமசுந்தரம் குணமடைந்து விட்டானாம். அவனை அழைத்துவர அவன் அப்பாரு போயிருக்கிறார். இன்று வந்து விடுவானாம்" என்று கூறினாள் ஜானகி தன் கணவர் அருணாசலத்திடம்.

"தன்னையும் தன் மகனையும் கொலை செய்ய முயற்சித்ததாக என் மீது ராமலிங்கம் வழக்குத் தொடர்ந்திருக்கிறான். எப்படியாவது என்னை ஜெயிலுக்கு அனுப்பவேண்டுமென்று ஏராளமாகப் பணம் செலவழித்து சாக்ஷிகளை அமர்த்தியிருக்கிறானாம்" என்று கூறினார் அருணாசலம்.

"வழக்கை வாபஸ் பெற அப்பா சம்மதித்து விட்டார். சிறு பிள்ளைகள் விளையாடும் போது சண்டையிட்டுக் கொள்வது போல, ஏதோ சண்டை நேர்ந்து விட்டது. அதற்காக ஆயுள் முழுவதும் நமக்குள் விரோதத்தை ஏன் வளர்த்துக் கொள்ளவேண்டும்?" என்று கூறிக்கொண்டே உள்ளே வந்தான் சோமசுந்தரம்.

அருணாசலம் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். அவர் கண்களில் திடீரெனக் கண்ணீர் பெருகியது. "சோமசுந்தரம்! தனக்குக் கெடுதல் செய்தவனுக்கு நன்மை செய்வதே, அவன் வெட்கித் தலைகுனிவதற்கு ஏற்றதாகும் என்ற பெரியோர்களின் கூற்றை மெய்ப்பித்து விட்டாய். உனக்கும் உன் தந்தைக்கும் பலவிதத்திலும் நான் தீங்கிழைத்து விட்டேன். என்னை மன்னித்துக் கொள்!"

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

சுதந்தர இந்தியா.

(கருமுத்து. தியாகராசன்)

சுதந்தரத்தின் பொருட்டு இந்தியா பிரிக்கப்பெற்று விட்டது. அந்தோ! அதுவும் மொழியையோ நாட்டையோ ஆதாரமாகக் கொள்ளாமல், சமயத்தை அடிப்படையாகக் கொண்டு துண்டாடப்பட்டிருக்கிறது. இத்தவறு பெருங்கேட்டை விளைவித்திருக்கிறது. கோடிக்கணக்கான ஆடவரும் பெண்டிரும், இளைஞரும் முதியவரும், எளியரும் செல்வரும், உயிரினும் சிறந்த மானத்தை இழந்தும், பிறந்து வளர்ந்து வாழ்ந்த வீட்டையும் ஊரையும் விட்டு ஓடியும், அரும்பாடுபட்டு ஈட்டிய பொருளைப் பறிகொடுத்தும், தங்கள் உயிரையும்கூட இழந்துமிருக்கின்றனர். அவர்கள் காப்பாற்றப்படவில்லை. சேதம் சேதமே. ஆகவே இன்று கிடைத்திருக்கும் உரிமை நன்மையைவிட தீமையையே விளைவித்து புகழ்ச்சிக்கு மாறாகப் பழிப்பைத் தந்திருக்கின்றது.

இனி, இந்தியாவிலுள்ள முப்பது கோடி மக்களின் எதிர்கால வாழ்க்கை நிலையைச் சற்று சிந்திப்போம். அவர்களின் தலைவிதி அரசியல் நிர்ணய சபையின் சில நூறு அங்கத்தினர்களின் கையிலிருக்கின்றது. இன்னும் சரியாகச் சொல்லின் ஒரு சில தலைவர்களின் பொறுப்பிலேயே யிருக்கின்றது. அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்கள் காங்கரசால் நியமிக்கப்பட்டவர்கள். ஆகையால் அவர்கள் தலைவர்களிடமுள்ள விசுவாசத்தால் சுயேச்சையாக இருத்தல் இயலாததாகும். இந்தியாவிலுள்ள தலைவர்களைப் போல் தியாகமும் மேன்மையுமுள்ளவர்களை வேறு தேசங்களிற் பார்ப்பது அரிதாகும். ஆயினும் துர்ப்பாக்கிய வசமாய் பதவி நிலை இவர்களையும் கொடிய சர்வாதிகாரிகளாக மாற்றிவிட்டது.

முற்றிலும் சுயேச்சையுள்ள மாகாணங்களும். சமஸ்தானங்களும் அடங்கிய உண்மையான குடி அரசைப்பெற்று நன்கு வாழலாமென்ற நம்பிக்கையால் இந்தியா நெடுங்காலம் துன்பப்பட்டு எத்தனையோ பரித்தியாகங்களைச் செய்து அயலார் ஆட்சிக்கெதிராகப் போரிட்டது. கிராமப் பஞ்சாயத்து முதல் மாகாண ஆட்சி வரை சுயாட்சி அமைப்பதே காங்கரசின் நோக்கமென்று கூறப்பட்டது. அரசியல் நிர்ணய சபை முதன்முதல் கூடியபொழுது சுவிஸ் நாட்டு ஆட்சி முறைப்படி அரசியல் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டது. மேலான இந்தக் கொள்கைகளெல்லாம் இன்று காற்றில் பறக்கின்றன. சமஸ்தானங்களை ஒன்று சேர்த்தலும், அதிகாரங்களை ஒருமுகப்படுத்தலும் செயலளவில் வந்துவிட்டன. உயரிய கொள்கைகளை இவ்வாறு மாறுபடத் திரித்தல் முறையாகுமா?

சிறு சமஸ்தானங்கள் இந்தியாவின் நன்மைக்கும் பாதுகாப்பிற்கும் இடையூறாக யிருக்கின்றன என்றும், ஆதலால் அவைகளை ஒன்று சேர்க்கவேண்டும் அல்லது மாகாணங்களோடு இணைத்து ஒடுக்கிவிட வேண்டுமென்றும் கூறப்படுகிறது. இக் கொள்கை தவறாகும்; முற்றிலும் தவறாகுமென்பதைக் கீழே நன்கு விளக்குவோம்.

மேலும் சமஸ்தானங்களை ஒன்று சேர்க்கவோ, மாகாணங்களோடு இணைக்கவோ 1935-ம் ஆண்டின் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடமில்லை எனினும், சமஸ்தானங்களை ஒன்று சேர்த்தலும் இணைத்தலும் உற்சாகத்தோடு விரைவாகச் செய்யப்படுகிறது. இந்த உற்சாகத்தையும் வேகத்தையும் வேறு மேலான நோக்கங்களில் செலுத்தியிருக்கலாம். புது அரசியல் அமைப்பில் சமஸ்தானங்களைச் சேர்க்கவும், இணைக்கவும் சட்டமாக்கி, அதற்கேற்பச் சமஸ்தானங்களின் வரவு செலவுகளை ஆராயவும்; சேர்ப்பதற்கோ இணைப்பதற்கோ மக்களின் உள்ளக் கருத்தை அறியவும், பரம்பரை உரிமையை விட்டுக்கொடுப்பதில் மன்னர்களின் சம்மதத்தைத் தெரியவும் ஒரு நடுநிலையுள்ள நியாய சபை ஏற்படுத்தினால் அதை உண்மையான ஜனநாயகம்என்றுசொல்லலாம். இன்றேல், ஜனநாயகம் எள்ளி நகையாடுவதற்குரிய கூத்தாக முடியுமன்றோ? நெறிமுறை பிறழ்ந்து சமஸ்தானங்களை ஒன்றாக்குவதும் இணைப்பதும் ஆகிய இத்தகைய யதேச்சாதிகாரச் செயல்கள், குடியரசின்றி அதன் நிழலாவது இருப்பினும் அதையும் கபடநாடகமாக்குவதாகும்.

சிறு சமஸ்தானங்கள் உண்மையில் இடையூறாக இருக்கின்றனவா? இல்லவே இல்லை. பெரிய நாடுகளைவிட சிறு நாடுகளே சுக வாழ்வுடையனவாக இருக்கின்றன என்பது சுவிஸ் அரசு முறையால் நன்கு தெளிவாகின்றது. சுவிஸ் நாடுதான் உலகத்தில் முதன்முதல் ஜனநாயகத்தை அடைந்தது. அந்நாடு அமைதியும் சுவாதீனமும் உள்ள சுவர்க்க நாடு என்று சொல்லப்படுகிறது. நாற்பத்தி இரண்டு இலட்சம் ஜனத்தொகைகொண்ட இச் சிறு நாடு 22-தனியாட்சி நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. பெரும் பிரிவுகள் ஆளுதற்கு அடங்காதனவாகவும், சிரமமாகவுமிருப்பதால் மூன்று பெரிய பிரிவுகள் மறுபடியும் இரண்டிரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, சுவிஸ்லாந்தில் 25-தனியாட்சி நாடுகள் இருக்கின்றன. சிறு நாடுகளாயின் மந்திரிகள் மக்களோடு நேரில் பழகுதலும், அவர்கள் குறையறிந்து தீர்த்தலும், அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்தலும் மிக எளிதாயிருக்கும். மக்கட்கு, அரசியல் நிர்வாகம், சுய ஆட்சி என்ற பெருங் கலையில் தேர்ச்சி பெறவும் இடமிருக்கும்.

ஆதலால் அழிக்கவொண்ணா உரிமையை மதித்துப்பேணும் எந்தச் சமஸ்தானமும் ஒன்று சேர்ந்தோ, இணைக்கப்பட்டோ சுவாதீனத்தையும், தன்னரசையும் இழந்து அழிந்து கேடுற உடன்படாது. அது தற்கொலைக்கன்றோ ஒப்பாகும்!

இனி, அதிகாரங்கள் எல்லாம்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

பிதிர் வணக்கம்!

☆

இந்த நாட்டிலே குடியேறிய லம்பாடிக் கூட்டமான பார்ப்பனர்கள் தங்கள் இனம் வாழ—உய்ய, திராவிட மக்களின் அறியாமையைப்பயன்படுத்திக் கொண்டனர். இறந்து போனவர்களில் சிலர் தேவர்களாகவும்—தெய்வங்களாகவும் உயர்த்தப்பட்டும், சிலர் பிசாசுகளாகத் தாழ்த்தப்பட்டும் போகிறார்கள் என்று மக்களை நம்பும்படி செய்தனர். எனவே மக்கள், தங்கள் இறந்து போன உறவினன் பேயாக அலையாது தேவனாக மாற—இந்திரனார் உலகினிலே இன்பம் பெறயாது செய்ய வேண்டுமெனப் பார்ப்பனப் புரோகிதர்களைக் கேட்டனர். “பிராமணர்களுக்கு ஏராளமான தானதருமங்களையும், சடங்குகளையும் மூன்று தலை முறையளவிற்குச் செய்தால் இறந்து போன முற்பிதாக்கள் காப்பாற்றப்பட்டுத் தேவருலகிலே இடம் பெறுவர்” என பதில் வந்தது, தர்ப்பைப்புல் லேந்திகளிடமிருந்து. மக்களும் அதனை நம்பினர். பார்ப்பனர்களைத் தங்கள் குடும்பக் குருக்களாக-புரோகிதர்களாக ஏற்றுக்கொண்டனர்.

சிரார்த்தம் அல்லது திவசம்.

இறந்து போனவனுடைய பிரேதமெனப்படும் ஆவி இந்கிலபாகத்திலும் வானவெளியிலும் பிசாசுகளாக அலைந்து திரியாதபடிக்கு, அவைகளுக்கு ஒவ்வொரு மாயா உடலையுண்டுபண்ணவே சிரார்த்தம் கொடுக்கப்படுகிறதாம். இந்த சிரார்த்தத்தினால் பிரேதமானது (ஆவி) பிதிராக மாறி, முதல் நாள் கொடுக்கிற சிரார்த்த பிண்டத்தால் அந்த மாயா உடலுக்குத் தலையும், இரண்டாம் நாள் பிண்டத்தால் கழுத்தும்,புயமும், மற்றும் சில உறுப்புகளும் முறையே உண்டாகிக் கடைசியாகப் பத்தாவது நாள் கொடுக்கிற பிண்டத்தினால் பூரண உடலும் உருவாகிப் பசியுண்டாகிற நிலைமையில் வந்து விடுகிறதாம். பதினொன்றாம் நாளிலோ அந்த மாயா உடல் கடும்பசியடைந்து தனக்குப் படைக்கப்படுகிறவைகளையெல்லாம் வாரித்தின்று பதின்மூன்றாம்நாள் யமலோகத்திற்குக் கடும் பிரயாணம் பண்ணி நடக்கப்பலமுள்ளதாகி விடுகிறதாம்.

கருட புராணம் கூறுவது.

பாவியினுடைய ஆவி 86,000 யோசனை அதாவது 774,000 மைல் தூரம் பிரயாணம் செய்யவேண்டும். அவ்வழியின் மத்தியில் 100 யோசனை (900 மைல்) அகலமுள்ளதும், அளவிடக்கூடாதபடி ஆழமிக்க ‘வைதாரணி’ என்னும் ஓர் ரத்த நதி ஓடுகிறதாம். அந்நதியில் பெரிய திமிங்கலம், சுறா மீன் போன்ற நீர் வாழ் பிராணிகள் வாழ்கின்றன. அந்நதிக்கு மேலே பிணந்தின்னிக் கழுகுகள் பந்தல் போட்டாற்போன்று மொய்த்துக் கொண்டிருப்பதால் சூரிய வெளிச்சம் குன்றி இருள் நிறைந்திருக்குமாம். அதன் கரையிலோ கணக்கற்ற தண்டனை பெற்ற ஆவிகள் பயத்தாலும் தாகத்தாலும் உடல் பதைபதைத்து, நடுநடுங்கிக் கொண்டு நின்று இறுதியாக இரத்தபானம் பண்ணி அந்நதியில் விழுந்து, வாரிக்கொள்ளப்பட்டு கீழான நரகத்தில் கொடிய துன்பத்தை அனுபவிக்கப் போய்ச் சேருகின்றனவாம். ஆனால் அந்த ஆவிகளின் உறவினர்கள் அவைகளுக்குச் சிரார்த்தங்கொடுத்து ‘அபரக்கிரியை’ சரியாக நிறைவேற்றிப்,பார்ப்பனர்களுக்கு ஏராளமாகத் தானங்களளித்தால் அந்தப் பாவதண்டனைகள் நிவர்த்தியாகி, காலனால் விடுவிக்கப்படுவார்களாம். பிதிர்க்கள் மன நிறைவுடனிருக்கவேண்டுமெனில் அவர்களுக்குப் பிரதிநிதிகளாக உள்ள பார்ப்பனர்களுக்கு எல்லாவிதத் தானதருமங்களும் செய்து அவர்களைத் திருப்தி படுத்தவேண்டுமாம்.

மேலும் ஒரு ‘ஞாதி’ (பிதிரின் உறவினன்) தன் பிதிருக்குச் செய்யும் புண்ணிய பலன்கள் அதிகமாகிவிட்டால் பிதிருக்கு வேண்டியதுபோக மீதமுள்ளவற்றை ஞாதியின் ‘பத்து-வரவு’ கணக்கில் ‘மிச்சப் புண்ணியமாக’ வைக்கப்படும். ஒருவேளை அந்த ஞாதியின் வாரிசுகள் ஒழுங்காக காலாகாலத்தில் அவனிறந்த பிறகு அவனுக்குப் புண்ணியக் கிரியை நடத்தாவிட்டால் முன்பே ‘இன்ஷியூர்’பண்ணி வைத்திருக்கும் புண்ணியம் அவனுக்கு உதவுமாம். தந்தையை மகன் ‘புத்’ என்ற நரகத்திலிருந்து சிரார்த்தங் கொடுப்பதின்மூலம் தப்புவிக்கிறான். நாள்தோறுமாவது கிரகப்பிரவேசங்களிலாவது,பேர் சூட்டுதலிலாவது சிரார்த்தம் கொடுக்கலாம் என்று கூறி,சில முக்கிய நன்னாட்களையும் தங்கள் வாழ்க்கை வசதிக்காக—பிழைப்புக்காக சாதகமாக்கிக்கொண்டனர், புரோகிதர்கள்.

ஒரு சிரார்த்தத்தில் கொடுக்கப்படுகிற கிழ வெள்ளாட்டு மாமிசத்தால் பன்னிரெண்டு வருடமும்,வாளைமீன், கட்கமிருகம், செவ்வாடு முதலியவற்றால் அளவற்ற நாட்களும் பிதிர்க்கள் திருப்தியடைகிறார்களென்றும், மச்சம், மான், முள்ளம்பன்றி, காட்டெருமை, முயல், ஆமை இவைகளின் மாமிசங்களையும், சிரார்த்தத்தில் கொடுப்பதால், அந்தந்த மாமிசங்களுக்கு ஏற்றாற்போல் மாதங்களைக் கணக்கிட்டு இத்தனை இத்தனைமாதங்கள் பிதிர்க்கள் திருப்தியடைகிறார்களென்றும், மனுஸ்மிருதியிற் சொல்லியிருக்க, இக்காலத்தில் பார்ப்பனர்கள் மாமிசங்களை வாங்காமல் நிறுத்திவிட்டு, காய்கனிகளை மட்டும் பெற்றுக்கொள்ளுவது ஏனோ? அவர்கள் குறிப்பிடும் நரகலோகம் பூமியிலோ, ஆகாயத்திலோ, எவ்விடத்திலுள்ளதென்றும், ஆவிகள் எத்தகைய வாகனங்களில் பிரயாணம்செய்து அவ்வுலகை அடையவேண்டுமென்றும், பிதிர்க்களின்பிரதிநிதிகள் தாங்கள் என்று பறைசாற்றிக்கொள்ளுகிற ‘டிரம்பட்டுகளான’ பார்ப்பனப்புரோகிதர்கள் பதில் கூறமுடியுமா? “இறந்துபோன நம் முன்னோர்களைக் காட்டிலும் இப்பார்ப்பனப் பிரதிநிதிகளுடைய ‘நடத்தை மிகவும் கேவலமாக இருக்கிறதே யென்று” மக்கள் மன்றம் சிந்திக்கும் அளவிற்கு இன்று நாட்டில் பகுத்தறிவு பரவி வருகிறது. பார்ப்பனர்களின் செல்வாக்கும் குறைந்து வருகிறது, மக்கள் புத்துணர்வுபெற்ற காரணத்தால்.

சிரார்த்தச் செலவு

பெரும்பாலான மக்கள் தங்கள் தாய் தந்தையரை மிகவும் மரியாதையாக நடத்துவார்களென்றாலும் ஒரு சிலர் தங்கள் பெற்றோரை விருத்தாப்பியக் காலத்தில் சரிவரப் பராமரியாது அசட்டை செய்துவிட்டு, அவர்கள் உயிர்நீத்தவுடனே மற்ற மக்கள் தங்களைப் புகழ்ந்து பேசும்படியாகப் பார்ப்பனர்களுக்குத் தங்கள் செல்வங்களை தானமாகக்கொடுத்து இறுதியில் கடன்காரராக நிற்பர். இது நாட்டில் இன்றும் நடைபெற்றுவரும் நிகழ்ச்சி. வங்காள நாட்டிலோ ஒரு மரணத்திற்குக் குறைந்தது 500-ரூபாயாவது செலவிடவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் அவர்களது சாதியினர் மதிக்காமல் ஒருவேளை சாதிக்குப் புறம்பாக்கி விடுவார்கள். அந்நாட்டிலிருந்த அரசர்களும், ஜமீன்தாரர்களும் கடன்பட்டு ஓட்டாண்டிகளானதற்கு இதுவும் கலியாணச் செலவுமே காரணமாகும். ஒரு சிரார்த்தத்தில் 120,000 பவுன் செலவிட்டதாக அந்நாட்டிலிருந்து கிடைத்துள்ள பழைய கணக்குப்பேரேடுகள் அறிவிக்கின்றனவாம்! இந்தச் செல்வத்தில் முக்கியமான பாகம், முகஸ்துதி செய்து

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

உண்மை உரையாடல்!

இடம்:— சென்னை-சிந்தாதிரிப் பேட்டை.

காலம்:— 23—12—48 மாலை-5-மணி.

பொருள்:— தமிழ் இசைச் சங்கம்.

வேலன்-அரசு இருநண்பர்கள்

வேலன்:- தம்பி அரசு! ஏதோ வேலையாயிருக்கிறாயே! வெளியில் உன்னுடன் புறப்படலாமென்றல்லவா வந்தேன்.

அரசு:- எங்கே அண்ணா?

வேலன்:- செயின்ட்மேரி மண்டபத்தில்-தமிழிசைச் சங்கம்-ஆறாவது ஆண்டு விழாவாம். இப்பொழுது தான் ஒரு சிறுவன் அழைப்பளித்தான். ஓமந்தூரார் பேசுகிறாராம். நீ என்ன எழுதுகிறாய்?

அரசு:- நான் 'எக்கோவின் காதல்' என்று ஒரு கதை எழுதுகிறேன். கதை வாயிலாகத்தான் நம்மவர்க்குப் பகுத்தறிவூட்ட வேண்டும், கருத்துப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். நம்மவர்கள் புராணக் கதைகளால் தானே மூடக்கொள்கையை மூளையில் ஏற்றிக்கொண்டிருக்கின்றனர்.

வேலன்:- உண்மைதான், முதன் முதல் சிறுகதை பல எழுதவேண்டிய இன்றியமையாமையை எடுத்துக் கூறி என்னையும் ஒரு தமிழ்க் கலைஞர் ஆக்கினார். நானும் எழுதிக்கொண்டு தான் வருகிறேன்.

அரசு:- கதை எழுதியிருக்கிறீர்களா? என்னிடம் சொல்லவே இல்லையே? என்ன கதை எழுதினீர்கள்?

வேலன்:- அந்தக் கதையைப் பிறகு பார்த்துக்கொள்வோம். இப்பொழுது போகவேண்டுமே.

அரசு:- போகலாம். இதோ வந்து விடுகிறேன், இந்தக் கதையைப் படிக்கிறேன், கேட்டு ஏதாவது தங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

வேலன்:- ஊம்...படி!

[அரசு ஆர்வமுடன் கதையைப் படித்தார். அது கதையாக எனக்குத் தோன்றவில்லை—ஒரு படப்பிடிப்புப் போலவே இருந்தது. தமிழிசை சங்கத்தையே மறந்துவிடும்படி செய்துவிட்டது. கதையும் முடிந்தது, நினைவும் எழுந்தது]

போகலாமா?

அரசு:- அண்ணா! தலையை வலிக்கிறதுபோலிருக்கிறது. கொஞ்சம் காபி சாப்பிட்டுப் போகலாமா?

வேலன்:-ஓ! போகலாமே. (காப்பி சாப்பிட்டு முடிந்தது—கூட்டத்திற்குச் சென்றோம், ஓமந்தூரார் பேச்சும் முடிந்தது) எப்படிப் பேசினார் என்று கேட்டதற்குச் சேதுப் பிள்ளையை விடச் சிறப்பாகப் பேசினார் என்றார்கள். சங்க இலக்கியங்களெல்லாம் அவர் பேச்சில் விளையாடிற்று என்றார் ஒரு நண்பர்.

வேலன்:-தம்பி-டி. கே. சி. பக்கத்தில் இருப்பது யார் தெரியுமா?

அரசு:-தெரியாதே.

வேலன்:-வலப்பக்கம்-பக்தவத்சலம் (மந்திரி) இடப்பக்கம் 'கல்கி'

அரசு:-குதிரையா? (கல்கி-குதிரை)

வேலன்:-இல்லை, இல்லை. கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி அய்யர் தமிழிசை பார்க்க வந்திருக்கிறார்.

அரசு:-என்ன அண்ணா-வெறும் அக்ரகார மயமாகவே இருக்கு. இங்கேயும் அவர்கள் தானோ?

வேலன்:-அவர்கள் வராவிட்டாலும் இவர்கள் விடமாட்டார்களே!

அரசு:-அதோ பேசுகிறவர் யார்?

வேலன்:-குரல் தெரியவில்லை. இங்கேயே இரு. பார்த்து வருகிறேன்.

ஏசஜனக் கூட்டம். வாசற்படியிலேயே நின்று கொண்டார்கள். அவர்களை விலக்கி உள்நுழைந்து பார்த்ததில் எப்பொழுதோ பார்த்த மாதிரி இருந்தது. அந்த மனிதரை இதற்குள் மின்னொளிப் படப்பிடிப்பு நடந்தது. பிறகு தெளிவாக அறிந்தேன் உறிஞ்சப்பட்ட ஆரஞ்சுப்பழமென்று. வெளியில் வந்து தம்பியிடம் சொன்னேன் சர். ஆர். கே. சண்முகமென்று.

அரசு:-ஓ! ஸ்ரீ சண்முகமா?

வேலன்:-இல்லை இல்லை. திரு. சண்முகந்தான்......

அரசு:-அதைப் பிறகு பேசிக்கொள்வோம். இப்பொழுது அவர் பேச்சைக் கேட்போம்....

திரு. சண்முகம் பேச்சு...

"ஆறு ஆண்டுகளுக்குமுன் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே இந்தத் தமிழிசைச் சங்கத்தை நிறுவவேண்டியதாயிற்று. அப்பொழுது பலர் தூற்றினர். எதிர்த்துப் போராடினர். இறுதியில் ஆத்திரத்தால் அவசரப்பட்டுத்தோற்று விக்கப்படும் இத்தமிழிசைச் சங்கம் சீக்கிரம் அழிந்துவிடுமென்று சபித்தனர். அப்படியொன்றும் ஆகிவிடவில்லை. அதற்குப் பதிலாக இவ்வளவு பேர் கூடும்படியான அளவுக்கு வளர்ச்சியே பெற்றுள்ளது. நீங்கள் நிறுவுங்கள்-பொருள் சேருங்கள்-கட்டிடங் கட்டுங்கள், நாங்கள் வந்து குடியேறி விடுகிறோம் என்றனர்" என்று கூறியவுடன் ஒலிபெருக்கி அதிர எழுந்த எக்காளம் எங்களைத் திக்குமுக்காடச் செய்து விட்டது.

வேலன்:-பார்த்தாயா தம்பி. திரு. சண்முகந்தான் அவர்.......

அரசு:-அண்ணா! ஏதோ மலைக்கின்றார்—நேரு சர்க்காரை நினைத்து விட்டார், ஓமந்தூராரைப் பார்த்து விட்டார். தாளம் தவறுது. சுதி குறையுது. ஸ்ரீ சண்முகம் ஆகப் போகிறார் பாருங்களேன்!

வேலன்:-அதெல்லாம் ஒன்றுமில்லை தம்பி! இவ்வளவு பேசினவரா திரும்புவார்?

அரசு:-இருங்களண்ணா பேச்சைக் கேட்போம்.

ஸ்ரீ சண்முகம்......

"தமிழிசை இந்தியக் கலையில் இணையற்றது. இந்தியாவிலுள்ள இந்து மதம் மஹாசமுத்திரம் போன்றது. தமிழ்க்கலையும் ஆரியக்கலை

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

பொதுமொழியா?

புதுமொழியாய்க் கண்டுபிடிக்கவேண்டும்!

★

சுத்தமான ஹிந்தியோ அல்லது கலப்பு ஹிந்தியோ அய்க்கிய மாகாணத்திற்குப் பொதுப் பாஷையாக இருக்கலாம். ஆனால் அதை இந்தியாவின் தேசிய பாஷையாகச் சுமத்தக்கூடாது. தேசிய பாஷை ஏற்படவே செய்யும். ஆனால் அது மாகாண பாஷையிலிருந்து வேறுபட்டதாக இருக்கும்.

—டாக்டர் பட்டாபி சீதாராமையா.

[ஜெய்ப்பூர் காங்கரஸ் மாநாட்டின் தலைமையுரையில், மொழிப் பிரச்சினை என்ற தலைப்பின் கீழ் 18ம் நாள் 'தினமணி'யின் 13ம் பக்கம் காணப்படுவது.]

1—1—49-ந் தேதி

நாடெங்கும் அடக்குமுறை எதிர்ப்பு வெற்றிக் கொண்டாட்டம்.

சாந்தமும் சமாதானமும் அமைதியும் ஒழுங்குமான முறையில் சுருக்கமான ஊர்வலம் கொண்ட பொதுக்கூட்டத்தில் வெற்றிக்கொண்டாட்டம் நடத்தப்படவேண்டுமென்று திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டி தீர்மானித்திருக்கிறது. அன்று மேற்கண்ட நடவடிக்கைகள் நடத்துவதில் மக்களுக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் போலீசு அதிகாரிகளுக்கும் சிறிதுகூட அதிருப்தி ஏற்படாமல் ஒழுங்குக்கும், போலீசு அதிகாரிகளுக்கும் கட்டுப்பட்டு நடந்துகொண்டு கொண்டாடவேண்டும்.

''தமிழ்நாட்டில் கட்டாய இந்தி ஒழிக'' ''தமிழ் வாழ்க'' ''திராவிடநாடு திராவிடருக்கே'' ''அடக்குமுறை ஒழிக!'' என்பதைத்தவிர வேறு ஒலிகள் கண்டிப்பாக, கண்டிப்பாக, வேண்டாம்.

ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!!

குடி அரசு

1—1—49 சனிக்கிழமை.

12-நாள் பாடம்.

கும்பகோணம் உரிமைப் போராட்டம் 19-12-48ல் தொடங்கி 30-12-48ம் நாளோடு 12 நாட்கள் நடந்து முடிந்திருக்கின்றது. இப்போராட்டம் பேச்சுரிமையைப் பிடுங்கும் விதத்தில், சர்க்கார் பல ஊர்களிலும் 144 போட்டு, கழகத்தின் அமைதியான போக்கிற்கு, சமாதான முறையில் செய்துவரும் போராட்டத்திற்கு, மறைமுகமாக அழிவையுண்டாக்கமுயற்சிக்கிறார்கள் என்று அறிந்ததினாலேயே, அதை நாம் எதிர்க்கிறோம் என்று காட்ட—பிரஜாவுரிமையை நிலைநாட்டத்தொடங்கப்பட்டதாகும். இப்போது கழகத்தின் காரியக் கமிட்டி 28உ தஞ்சையில் கூடிப் போராட்டத்தை 30உயோடு நிறுத்திக்கொள்வதென முடிவு செய்திருக்கிறது. ஏன்?

இந்த ஏன் என்பது எங்கெங்கிருந்துதான் கிளம்புகிறது என்பதற்கு ஒருவரையறையே சொல்ல முடியாது. சுருக்கமாக இவ்வுரிமைப் போராட்டத்தொடக்கத்தை யறிந்த இந்நாட்டினர் எல்லோருமே, அவர்கள் எந்தக் கட்சியினராயிருந்தாலும்—எக்கட்சியுமில்லாதவர்களாயிருந்தாலும் ஏன் என்று கேட்கின்றனர். அந்த அளவுக்குப் போராட்டத்தைப்பற்றி நாட்டில் அக்கரை கொண்டிருக்கிறார்கள்.

சட்ட மறுப்புச் செய்வதற்கு முன்னாலேயே, சட்டத்தை மீறுவதால் நமக்கு எப்படி எப்படித் தொந்தரவு உண்டாகும் என்பதை நாம் முன்கூட்டியே அறியாதவர்களல்ல. சிறையை நிரப்பிவைத்துக் கொண்டிருக்கும் சர்க்கார்-சிறைச் சாலையைப் பெருக்குங்கள், பெருக்குங்கள் என்று நாம் அடிக்கடி கூறிவந்ததை யேற்று அதற்குச் செவி சாய்க்காத சர்க்கார், இப்போது நாம் தடையை மீறினால் சிறைக்கனுப்ப முடியாதென்பதையும், நிச்சயமாகக் கால் கையை ஒடித்தோ, உயிரைப்போக்கியோ தான் தண்டனை கொடுக்க முடியும் என்பதையும், நேற்று ஓமந்தூரார் சொல்வதற்கு முன்னாலேயே நாம் ஒவ்வொருவரும் அறிந்தே யிருக்கின்றோம். அறிந்தே காரியத்தில் ஈடுபட்டோம். அப்படியிருக்க 12-நாளில் ஏன் இந்த முடிவு? தொண்டர்கள் சோர்ந்து திகைத்து விட்டார்களா? தலைவர்கள் ஓடி ஒளிந்து கொண்டார்களா? கூலிப் பட்டாளத்திற்கு வாய்க்கரிசி போட முடியவில்லையா?

போலீசாரின் மிருகவெறி எந்த அளவுக்குஉயர்ந்ததோ, இனிஎந்த அளவுக்கு உயருமென்று கற்பனை செய்ய முடியுமோ அந்த அளவிலும் கூட தொண்டர்கள் தம் மனவுறுதி குலையார் என்பதையும், மனமகிழ்ச்சியோடு முகமலர்ச்சியுடனே எந்தக்கொடுமையையும் ஏற்றுக்கொள்ளத் தயார் என்பதையும் அதிகாரிகளின் 'ரிப்போர்ட்' அறிவிக்கும். ஓடி ஒளியும் தலைவர்கள் கழகத்தில் ஒருவருமே இல்லை என்பதை நாடு அறியும். கூலிக்குப்படை திரட்ட வேண்டிய நிலையில், ஆசை வார்த்தை காட்டி மோசம் செய்யவேண்டிய நிலையில் கழகமில்லை, வாய்க்கரிசி போட்டுவரக் கழகத்திற்கு வளமும் இல்லை; நமக்கு அந்த அடிபடும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று எரிச்சல் கொள்ளும் போர் மறவர்களே கழகத்தில் நிரம்பியிருக்கின்றனர், கழகச் செயலுக்கு நம்முடைய பொருட் 'காணிக்கை' எவ்வளவு என்று கேட்கும் தொண்டர்கள் தான் போராட்டத்தில் குதித்திருக்கின்றார்கள். இதை அரசாங்க மட்டுமல்ல, நம்மை எந்த விதத்தில் குறை சொல்லலாம் எனக் காத்துக் கொண்டு, நம்மை எதிரியாகக் கருதியிருக்கும் ஒவ்வொரு துறையில் உள்ளவர்களும் அறிவார்கள். அதனால்தான் இந்த 'ஏன்' என்கிற கேள்வி இவ்வளவு மும்முரமாக உயிர்ப்போடு, பெருமூச்சோடு, சந்தேகத்தோடு கேட்கப்படுகிறது.

பெரியாரவர்களின் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்கள்,

அதாவது இந்த நாட்டில் எந்த விதமான கலவரமோ, கேடோ உண்டாகுமானால், அவற்றால் திராவிட சமுதாயந்தான் நஷ்டமடைய முடியுமேதவிர, திராவிட சமுதாயத்தின் எதிரிகளுக்கு ஒரு சிறு துரும்பளவுகூட நஷ்டமில்லை என்பதோடு, திராவிடனுடைய ஒவ்வொரு சிறு நஷ்டமும் திராவிட எதிரிகளுக்கு ஒன்றுக்குப் பத்தாக லாபமாகத்தான் ஆகிவந்திருக்கின்றது என்பதை யுணர்ந்தவர்களும், சட்டமறுப்புப் போரில் சர்க்கார் கையாண்டு வந்த முறைகள் நாளுக்கு நாள் மாறி வந்திருப்பதைச் சேர்த்தெண்ணுபவர்களும் நிச்சயமாக ஏன் என்று கேட்கமாட்டார்கள்.

அதிகார வர்க்கத்தின் சார்பாய் மிருகவெறிவளர்ந்தோங்குமானால் நாளுக்கு நாள் எல்லை கட்டமுடியாத அளவுக்கு விரிந்துகொண்டே போகுமானால், அதனுடைய முடிவு அதாவது அதனுடைய அழிவு எப்படி நிறைவேறும் என்பதைச் சரித்திரம் சொல்லுகிறது. பல நாடுகளில் இன்றும் பார்த்து வருகிறோம். அந்தமாதிரி பொதுமக்களையும், மிருகவுணர்ச்சிக்கு எதிராக மிருகவுணர்ச்சி கொள்ளத் தூண்டவேண்டுமென்பது, அவ்வுணர்ச்சியை நாட்டில் வளர்த்துவரவேண்டுமென்பது கழகத்தின் திட்டமல்ல என்பதையும், ஆரம்பத்தில் மந்திரியின் உத்திரவைப் பெற்று மனஞ்சலிக்கும் வரை அடித்து வந்த அதிகாரிகள், பிறகு அப்போக்கை அறவே கைவிட்டு விட்டார்கள் என்றால் அதில் மந்திரிகளுடைய தலையீடு எவ்வளவு? மந்திரிகளுக்கு மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? என்பதையும் சேர்த்து எண்ணுபவர்களுக்கு உண்மையிலேயே "ஏன்" என்கிற எண்ணம் உண்டாக முடியுமா? என்பது சந்தேகமே.

மந்திரிகளின் மனமாற்றத்தை எடுத்துக்காட்டி, நம்முடைய லட்சியம் நாட்டில் சட்டமறுப்புணர்ச்சியைப் பெருக்குவதல்லவே, ஏன் இதை இந்த அளவில் நிறுத்தி, மந்திரிகளுக்கு மேலும் நல்ல நாகரீகமான போக்கு வளரும்படியாய் நாம் நடந்து கொள்ளக்கூடாது என்று பெரியாரவர்கள் வற்புறுத்திக் கூறியதின்மீதே காரியக்கமிட்டி, ஏதும் பதில் கூற வகையற்றுஇந்த முடிவைச் செய்திருக்கிறது. இந்த முடிவு பெரியாரவர்களுடைய பெருந்தன்மைக்கு—அறப்போரில் அவர்களுக்குள்ள ஈடுபாட்டுக்கு—நாட்டு மக்களின் நலத்தில் கொண்டிருக்கும் அக்கரைக்குநல்லதொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

பெரியாரவர்களுடையஇப்பெருங்குணத்தை உட்கொள்ள முடியாத நம் இளைஞர்கள், இம்முடிவைக் கேட்டுப் பெரும் கலக்கமடைவார்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால் அறப்போரின் இறுதி முடிவும் அதன் நடப்பும் அமைதியான முறையிலேயே இருக்கவேண்டும் என்பதிலேகருத்தைச்செலுத்துவார்களானால்,இச்சந்தர்ப்பம் மந்திரிகளின் மனமாற்றத்தின் வளர்ச்சிக்காகமட்டுமல்ல, நம்முடைய உள்ளத்தையும் எஃகு ஆக்கிக்கொள்வதற்கான சந்தர்ப்பம் என்றே கருதவேண்டியவர்களாவார்கள் என்பதை வற்புறுத்திக் கூறுகிறோம்.

குடந்தைப் போராட்டம் தொடங்கிய பிறகுதான் வேலூரில் 144! விழுப்புரத்தில் 144! கல்லக்குறிச்சியில் 144!......என்று மற்றொரு புறம் செய்தி வந்து கொண்டேயிருக்கிறது. இவைகளை எண்ணும்போது மந்திரிகள் மனமாற்றம் நிலையானதுதானா? 12 நாள் பாடமும் அதன்பின், போரை நிறுத்தியிருக்கும் போக்கும் பயனைத்தரவில்லையா?

இதை எண்ணவேண்டியவர்கள் இன்றையஆளவந்தார்கள். ஆனால் நம்மைப் பொறுத்தவரையிலும் இந்த 12 நாள் பாடமும் பெரும் பயனைத் தந்திருக்கிறது. "இந்தச் சட்டமறுப்புப் போராட்டம் எங்களுக்கு ஒரு பாலபாடமே என்றாலும் இதில் நூற்றுக்கு நூறுவெற்றியில்லையா" என்கிறார்கள் நம் போர் மறவர்கள்.

இந்த வெற்றி நம் கருத்துப்படி ஒரு அச்சாரமே. பாக்கி விலையை இன்றோ நாளையோ நாம் கொடுத்தேயாக வேண்டும். அது எப்படியிருக்கவேண்டும் என்பதை முடிவுசெய்யவேண்டியவர்கள் இன்று நம் மந்திரிகள். ஆதலால் இந்த 12-நாள் பாடத்தையும் யார்தான் மறந்துவிட முடியும்?

இரக்கமில்லா அரக்கன்!

★

யார் அது? இராவணனைக் குறிப்பிடுகின்றாயா? ஆமாம்! அவன் ஒரு இரக்கமற்ற அரக்கன்; கற்புக்கரசி சீதாதேவியைச் சிறையெடுத்து அவள் தம் மணவாளன் இராம பெருமானைப் புண்படச் செய்தவன்; தேவியார் சிறையிலே சிறுமைப் பட்டபோது இரக்கம் காட்ட மறுத்தவன்; கன்னியின் கண்ணீரைக் கண்டபோது கலங்காதவன்; விபீடணனின் அறிவுரையை வீண் உரையென எண்ணியவன்; ஆகையால் அவன் இரக்கமிலா அரக்கனேதான்—என்று கம்பதாசர்கள் கூறுவர். அவர்கள் அகராதிபடி இரக்கமிலா அனைவரும் அரக்கர்தான்.

அந்த அரக்கர் பட்டியலிலே நமது சென்னை அரசாங்கமும் வருகிறதா என்பதே நமது கேள்வி. என்ன, சென்னை அரசாங்கம் இரக்கமிலா அரக்கர் அரசாங்கமா? இது என்ன புதிராக இருக்கின்றதே!—என்று கம்புதாசர்களும் கதராடை பக்தர்களும் வினாவுவர். சேதுபிள்ளைகள் சீறுவர். ஆமாம்! இரக்கமிலா அரக்கர் அரசாங்கம் என்று தான் கூறுகிறோம், குற்றம் சாட்டுகிறோம். சரியா, தவறா என்பதை முழுவதும் படித்த பின்னர் தீர்ப்பளிக்கவேண்டுகிறேன்.

குடந்தையிலே 144; அதை மீற வேண்டுமென்பது ஆயிரம் ஆயிரம் மக்களின் ஏகோபித்த தீர்மானம். மீறியவர்களை சிறைபடுத்த வேண்டுமென்பது அரசியலாரின் சட்டம். குடந்தை அதிகாரிகள் தடையை மீறியவர்களிடத்து இரக்கம் காட்டவில்லை என்பதுதான் நமது குற்றச் சாட்டு, ஆகவேதான் அவர்களை அரக்கர் என்று கூறுகிறோம் கம்பரது காவியப்படி.

திராவிடர் கழகத்தார் சிறைக்கஞ்சா சிங்கங்கள் ஆகையால், அவர்கள் அரசியலார் இரக்கம் காட்டுவர் என எதிர்பார்த்திருக்க

மாட்டார்கள். இருந்தாலும் அரசியலார் என்ன செய்திருக்க வேண்டும்?

நள்ளிரவிலே வயது முதிர்ந்த ஒரு பெரியாரைச் சிறைசெய்வது நியாயமா எனக்கேட்கிறோம். இரக்கத்தின் பாற்பட்டதா என அறிய விரும்புகிறோம். ஓர் உத்தமத் தியாகி-சீர்திருத்தச் சிங்கம்-எளிய வாழ்க்கையின் இருப்பிடம் தோல்வி காணாத வெற்றி வீரன்—சலியாத உழைப்பாளி—சிந்தனைச் சிற்பி—மக்கள் மனநிலையறிந்த மறத்தமிழன்—தன்மானத் தந்தை—பகுத்தறிவின் பலகணி—குடியரசின் கோட்டை—விடுதலையின் விவேகி பல்லாண்டுகளாய் பொதுநலமே உயிரென வாழும் உத்தமத் தோழன்—இவரையா நள்ளிரவில் சிறை செய்வது? இரவு இரண்டு மணிக்கு சிறை செய்யக்கூடிய விதத்திலே அவர் என்ன அப்படிக் குற்றம் செய்துவிட்டார்? சிறைக்குச் செல்லத் தயாராய் இருக்கிறேனென ஒரு தடவையல்ல, ஆயிரந்தடவை கூறியுள்ளாரே! கம்யூனிஸ்டு, ராஸ்டிரியசுயம் சேவக் சங்கம் போன்று "அண்டர் கிரவுண்டில்" அரசியலாருக்கு விரோதமாக வேலை செய்கிறாரா? நள்ளிரவிலே கைது செய்ய—அல்லது அகப்பட்டபோது கைவிலங்கு பூட்ட. அவர்தான் 'அரஸ்டை' எதிர்பார்த்துக் கொண்டுள்ளாரே. இரக்கமிலா அரசாங்கமாக இருப்பதினால்தானே எழுபது வயதுக் கிழவனை நள்ளிரவில் சிறை செய்து வதைத்தார்கள்.

சிறைசெய்ததுதான் போகட்டும். மார்புவலி என்று தெரிந்த பிறகாவது திருச்சிக்கும் தஞ்சைக்கும் கொண்டு செல்லாதிருந்தார்களா? நெஞ்சுவலி என்று கூறிய போதாவது மருத்துவரை அனுப்பித்து ஆவன செய்தார்களா? இரக்கமிலா அரக்கர் அரசாங்கம் என்று கூறுவதிலே என்ன தவறு?

144 தடை விதித்தபின்பு, தடை விதிக்கப்பட்டுத், தடையை மீறினவர்களை என்ன செய்ய வேண்டும்? தடிகொண்டு தாக்குவதுதான் ஜனநாயக சர்க்காரின் கொள்கையா? தடையை மீறினவர்களைப் போக்குவரத்து இல்லாத காடுகளிலே விடப்பட்டு வருத்துவது பொதுஜன சர்க்காரின் வேலையா? இரக்கமிலா அரக்கன் என்று குற்றம் சாட்டப்படுகிற இராவணனது இராஜ்ஜியத்தில் கூட இதுபோன்றகொடுமைகளைக் காணமுடியாதே. அரக்கர்களுக்கு இரக்கமிருக்காது என்று இலக்கணம் வகுக்கும் சர்க்கார் தங்கள் நடத்தைக்கு என்ன கூறுவர்? இதைப்பற்றிக் கம்பதாசர்களது கருத்தென்ன? இதை இரக்கமற்ற செய்கையென்று அவர்கள் கருதுவார்களானால், இராவணன்மேல் வீசப்படும் கண்டனங்களை இந்நாகரீக(?) சர்க்கார்மேல் ஏன் வீசக்கூடாது? இனியாவது செய்வார்களா? 144 தடை உத்திரவை மீறிய தொண்டர்களை இடிப்பொடிய அடித்தது, அடித்தபிறகு அதிகாரத்தொனியுடன் கண்டபடி பேசியது, காட்டுமிராண்டி செய்கை தான் எனக்கூறுவார்களா? "இரக்கமிலா அரக்கர் பட்டியலிலே" இச்சென்னை அரசாங்கத்தையும் கொண்டு வருவார்களா?

"வல்லபை தேவி"

(7ம் பக்கத் தொடர்ச்சி)

யும் இரண்டறக்கலந்த ஒன்றே இந்துமதம். அதை எவராலும் அழிக்கவே முடியாது. அழிக்க முற்படுவது வீண் பிரயத்தனமேயாகும்."

வேலன்:-இது என்ன சம்பந்தா சம்பந்தமில்லாமல் செட்டியார் தமிழிசை நடுவே இந்துஸ்தானி பாடுகிறாரே! வடக்கத்திய வாடையா?

அரசு:-இல்லை இல்லை. தென்னாட்டுத் தென்றல்தான் இப்படி வீசுகிறது.

வேலன்:- இரு இன்னும் என்ன பேசுகிறார் கேட்போம். கா. சு. பிள்ளை — மறைமலையடிகள் — திரு. வி. க. போன்ற பேரறிஞர்களெல்லாம்—தமிழர் சமயத்தைப்பற்றி எழுதிய நூல்களை இவர் பார்த்ததில்லையா? திராவிட நாகரீகம் வேறு—ஆரிய நாகரீகம் வேறு என்றுகூடவா இவ்வளவு பெரிய அறிவாளி இன்னும் புரிந்துகொள்ளவில்லை.

அரசு:- புரிந்து இருந்தால் தானே-அதுதான் போயிட்டுதே. அது இருந்தால் ஏன் இன்னும் தோளில் பூணூல் தொங்குது-ஒழியட்டும்.

திரு-சண்முகனார்.

"சமுத்திரத்தில் பல ஆறுகளும் ஓடி விழுகின்றன. அதனால் பெரிய சமுத்திரம் இருக்கும்பொழுது சிறிய ஆறுகள் எதற்கு? அவற்றையெல்லாம் அடைத்துவிடலாம் என்றனர். அதாவது இப்பொழுது இருக்கும் சங்கீதமே சிறந்தது, எதற்காகத் தனியே தமிழிசை என்ற பிரிவு என்பதே அதன் அர்த்தம். இசை உயிரை வளர்ப்பது, தமிழிசை தமிழரின் உயிரை வளர்ப்பது. அதுபோலவே தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழியிசைகளும் உயிரை வளர்க்கக் கூடியனவே. அவை தனித்தனி வளர்ச்சியடைய வேண்டியதேயாகும். அதற்கு எவரும் தடையாக இருத்தலாகாது. இக்கருத்தோடுதான் இத்தமிழிசைச் சங்கம் தொடங்கப்பட்டது. ஆண்டு ஆறாகிவிட்டது. இதற்குப் பேராதரவாளராக இருந்தவர் ராஜா சர், அண்ணாமலை செட்டியாரவர்களேயாவர். அவர் மறைவுக்குப்பின் இக்கூட்டமே முதலாவதாகக் கூட்டப் பெற்றதால் அவர் நினைவாக எல்லோரும் அரை நிமிடம் எழுந்து அமர்வோமாக"—எல்லோரும் எழுந்து அமர்ந்தனர். அடுத்து அண்ணாமலைப் பல்கலைக் கழக இசையரசிகள் இன்னிசை விருந்தளித்தனர்-சிலர் வெளியில் நகர்ந்தனர். நாங்களும் வெளி வந்தோம். அப்பொழுது எங்களுடன் வந்த இருவர் கூட்ட நிகழ்ச்சியைக் குறித்துப் பேசத்தொடங்கினர். நாங்கள் அப்பேச்சிற்குச் செவி சாய்த்தோம்.

அவர்கள் பேசியது.

ஒருவர்:-எங்காணும், ஷண்முகஞ் செட்டியார்வாள் பேசினதைக் கேட்டேளோ?

மற்றவர்:-'ஓ' நன்னாக்கேட்டுண்டு தான் இருந்தேன்.

[இருவருக்கும் இரண்டு புனைப்பெயர் தருகின்றேன் வாசகர்களுக்காக]

1. தேங்காக் குடுமி.
2. ஜிட் குடுமி.

தேங்கா:- "என்னா அப்படி பேசித் தொலைச்சுட்டார்."

ஜிட்:- போங்காணும் மறைமுகமாகத் தாக்கினாலும் சரி நேரடியாகத் தாக்கினாலும் சரி. நமக்கு ஆபத்தே கிடையாதுங்காணும்.

தேங்கா:-ஏன் அப்படிச் சொல்றேள்?

ஜிட்:-அவர் பிரசங்கத்தைக் கவனிச்ச லட்சணம் இவ்வளவுதானா? 'தமிழும் ஆரியமும் கலந்துதான் இந்துமதம் உண்டானது. அதை எவராலும் அழிக்க முடியாது' என்று அவர் பேசினாரோல்லியோ? அந்த மோகம் இருக்கிறச்சே நாம் எங்காணும் பயப்படணும். அந்த மோகம் நீங்கிற வரைக்கும் அவர் சண்முக தாசர் தான்.

தேங்கா:- போங்காணும், அதை நம்பி மோசம் போயிடாதீர்! அந்த—இந்து மதப்பித்து, பதவி வேட்டைக்காகப் பிடிச்சிருக்கு. இந்து மதம், இந்து மதம் என்று ஜெபிச்சிண்டிருந்

தா இங்கே ஏதாவது சான்ஸ் கிடைக்குமேன்னுதான்! அதுவும் ஓமந்தூர் ரெட்டியாருக்கு முன்னாலே சொன்னா ஏதேனும் பிரயோஜனம் கிட்டாதான்னு பேசினாருங்காணும். ஓமந்தூராரா ஏமாறுவாரு. கடைசியிலே வழியனுப்புகையில் கல்கியுடன் ரெட்டியார் பேசிண்டே போரச்சே செட்டியார் கும்பிட்ட கும்பிடை லட்சியம் பண்ணலேயே அவரு.

பேச்சைக் கேட்ட அரசு:- பார்த்தீரா அண்ணா! தமிழினத்திற் பிறந்து நமக்கும் விபீஷணனாகி அங்கேயும் திட்டு வாங்குறாரே! ஏன் இப்படி அறிவையும் மானத்தையும் அடகு வைக்கிறார்?

—"வீரமணி"

(6ம் பக்கத் தொடர்ச்சி)

காலந்தள்ளுகிற பார்ப்பனர்களுக்கும் ஆணவமும் அகங்காரமும் கொண்ட வித்துவான்களுக்கும், வேடதாரிகளான வைதீகர்களுக்கும், அலைந்து திரிகிற ஊர்சுற்றிகளான ஆண்டி பரதேசிகளுக்கும் வீணாகச் செலவிடப்பட்டதாக அந்த ஏடுகள் தெரிவிக்கின்றனவாம்!

பாட்னாவிற்கு 55-மைல் தூரத்திற்குத் தெற்கேயிருக்கிற—கயா—வென்னுமிடத்தில் சிரார்த்தம் கொடுத்தால் எல்லாஉறவினர்களுடைய பிதிர்க்களும் திருப்தி அடைகிறார்களென்றும், அவர்கள் உடனே விஷ்ணு இருக்குமிடமாகிய வைகுண்டத்திற்குச் சென்று விடுகிறார்களென்றும், அங்குள்ள பார்ப்பனர்கள் அங்குவரும் மக்களை ஏமாற்றி சுமார் 100-'ஸ்நானக்' கட்டடங்கள் கட்டுவித்து, ஒவ்வொரு கட்டடத்திலும் தட்சணைகள் கொடுக்க வேண்டுமென்று தட்டிப் பறித்துக் கொள்கிறார்கள். இன்றும் இத்தகைய அநீதிகள் மதச்சார்பற்ற ஆட்சி யென்று கூறிக்கொள்கின்ற சர்க்காரில் நடைபெற்று வருகின்றன. பார்ப்பனர்களுக்கு இன்னும் அதிக வருவாயைத் தேடிக் கொடுப்பதில் முனைந்துவரும் பொழுது எப்படி இவற்றையெல்லாம் நீக்க—கண்டிக்க மனம் வரும் ஆளவந்தார்க்கு! ஆட்சிப் பீடத்திலமர்ந்துள்ளவர்களே அவர்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களல்லவா? அப்படியிருக்க நாம் எப்படி இவர்களிடமிருந்து சீர்திருத்தங்களை எதிர்பார்க்கமுடியும்!

மனிதன் தன் வாழ்நாளில் செய்து வந்த செய்கைகளுக்குத் தக்கதாகத் தனக்கு மறுபிறப்பில் பலன் கிடைக்கிறதில்லையென்றும், தன் வாரிசுகள் தனக்குச் சிரார்த்தங் கொடுப்பதற்குச் சிறிது செல்வம் தேடிவைத்திருந்தால்; தனக்கு மோட்சம் கிடைக்குமென்கிற உறுதியோடு எத்தகைய கொடிய பாவத்தையும் கூசாமல் துணிந்து செய்யத் தூண்டுவதுமல்லாமல், தான் இறந்தபிறகு தனது மகன் தனக்காக சிரார்த்தங் கொடுப்பானோ, அல்லது தான் யமலோகத் தண்டனை அடைய வேண்டுமோவென்று, மன ஏக்கத்தோடு நிம்மதியற்று இறக்க வைக்கிறது, இந்தச் சிரார்த்தம்.

மாம்பழங்கேட்டு அதனைக்கொண்டு வருமுன் இறந்துபோன தனது தாயினுடைய ஆத்மாவைச் சாந்திப்படுத்த கிருஷ்ணதேவராயர் என்ற அரசன் பார்ப்பனர்களுக்குத் தங்க மாம்பழம் கொடுத்தானென்றும், அவனது அவையிலிருந்த விதூஷகனான தென்னாலிராமன் வலிப்பு நோய்கொண்ட தன் தாய்க்குச் சூடுபோடுமுன்னிறந்து போனதாகவும், அவள் ஆத்மா சாந்தியடைய பார்ப்பனர்களுக்குத் தானம் செய்யப்போவதாகவும், கூறி, பார்ப்பனர்களை அழைத்துச் சூடுபோட்டானென்றும் ஒரு கதை நம் நாட்டிலே சொல்லப்பட்டுவருகிறது. அந்தக் கதையை மெய்ப்பிக்க இன்று ஏராளமான தென்னாலிராமன்கள் (சீர்திருத்தவாதிகள்) தோன்றவேண்டும். அப்பொழுதுதான் சிரார்த்தம்போன்ற பித்தலாட்டச் செயல்கள் நாட்டைவிட்டு ஒழிய வழி ஏற்படும்.

எனக்கு மோட்சம்! — இதுதான் இந்தக் காலத்தில் மக்களது பாட்டு, பல்லவி எல்லாம். இதற்குப் பக்கமேளமாக அமைந்தது சுரண்டும் சுயநலக்கும்பலின் சூதுச் செயல்கள். தனது வாழ்வின் தன்மையை—நோக்கத்தைஉணரஇயலாத மனிதன், இந்திரனார் உலகினிலே 'சீட்ரிசவ்' செய்துகொள்ளத்திட்டமிடுகிறான். அவனுக்கு மேலுலகத்திற்குச் செல்ல டிக்கட் கொடுக்கும் 'புக்கிங் கிளார்க்குகளாக' அமைந்தனர், பார்ப்பனப் புரோகிதர்கள். திராவிட மக்களின் பலவீனத்தை முதலீடாக்கி தங்கள் சுயவியாபாரத்தை — பகற்கொள்ளையைவிட கொடிய வியாபாரத்தைப் பெருக்கத் திட்டமிட்ட பார்ப்பனப் புரோகிதர்களின் ஆவல் இதுவரை வெற்றிகரமாகவே நடைபெற்று வருகிறது என்பதை இக்கட்டுரை உங்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கும்.

புரோகித வர்க்கம் மக்களது அறியாமையை விரிவுபடுத்தியபின்பு, மரணத்திற்குப் பிறகு மனிதனுடைய நிலையாது என்பதை யறியாதிருந்த மக்களிடம் மோட்சம், நரகம், எம தண்டனை, பாபபுண்ணியம் என்றெல்லாம் கூறி, தங்களைத் தாங்களே மோட்சலோக 'போஸ்ட் பாக்சு'களாக நியமித்துக்கொண்டு, சமூகத்தின் பொருளையும்-பணத்தையும் சுரண்டஆரம்பித்தது. சிரார்த்தங் கொடுக்கும் போது பிதிர்க்களுக்குக் கொடுக்கும் காணிக்கைகளை அவைகளின் பிரதிநிதிகளான பார்ப்பனர்களுக்குக் கொடுக்கவேண்டும் எனச் சட்டமியற்றியது புரோகித வர்க்கத்தின் சுயநலமேயாகும்.

திராவிட மக்களிடம் சிந்தனை விழிப்பு ஏற்பட ஏற்பட புரோகிதர்களின் வீண் மாய்மால—'ஜல்லி' வார்த்தைகளின் உண்மைத் தன்மை அம்பலத்திற்கு வந்தே தீரும். மக்களை ஏமாற்றி அவர்களது அறியாமையைப் பயன்படுத்திக்கொண்டு தாம் ஏற்றம் பெற எண்ணுகிற—கிடைத்தவற்றை சுருட்டிக் கொள்ள விரும்புகிற, புரோகிதக் கும்பலின் சுயநலச் சூதுச்செயல்களுக்குச் சமாதி அமைக்கப்படவேண்டும் என நாவலிக்கிறோம், பகுத்தறிவியக்கத்தினராகிய நாங்கள்.

'இனி இத்தகைய ஏமாற்று வித்தைகள் திராவிட நாட்டிலே நடைபெற அனுமதிக்கமாட்டோம்' எனப் போர் முரசு கொட்டித் துடித்தெழுந்துள்ளது இன்றைய வாலிப உலகம். இருந்தும் எண்ணற்ற பாமர மக்கள்—ஒரு சில படிக்கத்தெரிந்த அரைகுறைகள் இன்னும் அறியாமையிலேயே மூழ்கிக்கிடப்பதால் அவர்களது சிந்தனைக்கு வேலை கொடுத்து அவர்களது மயக்கத்தைத் தெளியவைக்கத்தான் இத்தகைய கட்டுரைகள்.

சமூகத்தில் நல்ல பாம்புகளாக நடமாடிக்கொண்டிருக்கும் புரோகிதச் சதிச்செயல்கள் ஒழிக்கப்படவேண்டுமானால் முதலில் 'பிதிர் வணக்கம்' போன்ற அறிவற்ற செய்கைகளை மக்கள் வெறுத்தொதுக்கவேண்டும்.

விழித்தெழுந்து வீறுகொண்டுஇழந்த உரிமைகளைப் பெறுவோம். ஆரியச் சதிச் செயல்களை மட்டந்தட்டுவோம் என உறுதி கொண்டு நாட்டைச் சீர்திருத்த உழைப்போம். முன்னேறுவோம்.

"தனமனோகரன்"

கவிஞர் பாரதிதாசன்.

பாரதிதாசன் கவிதைகள்		3	8	0
பாண்டியன் பரிசு		3	8	0
எதிர்பாராத முத்தம்		1	4	0
அழகின் சிரிப்பு		1	0	0
தமிழ் இயக்கம்		1	0	0
காதல் நினைவுகள்		0	12	0
இசையமுது		0	12	0
முல்லைக்காடு		0	12	0
நல்லதீர்ப்பு		0	10	0
கவிஞர் பேசுகிறார்		0	10	0
குடும்பவிளக்கு	I	0	10	0
,,	II	0	6	0
அமைதி		0	8	0

நாதன் கம்பெனி லிமிடெட்
கச்சேரி வீதி, ஈரோடு.

[5ம் பக்கத் தொடர்ச்சி]

மத்திய அரசைச் சார்ந்திருத்தல், மாகாணங்களின் சுதந்தரத்தைக் குலைத்துப் பறித்து ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்குவதாகும். மத்திய அரசில் ஏற்படும் தவறு எல்லா மாகாணங்களையும் பாதிக்கும். மேலும் அமைதி குன்றிப் போர் ஏற்படும் காலத்தில் மத்திய அரசு உள்நாட்டுப் பிரச்னைகளில் சிக்கிக் கலங்கிக் கவலைப்படாமல் தன் கவனம், சக்தி முழுவதையும் பாதுகாப்பிலும் அயல்நாட்டு உறவிலும் செலுத்தி நாட்டைக்காத்தலன்றோ முறைமையும் கடமையுமாகும்.

இரண்டு பெருங்கொடிய உலக யுத்தங்களில் தனிப்பட்டு விலகி நின்ற சுவிஸ்லாந்து தேசத்தில் மத்திய அதிகாரங்கள் முக்கியமாக பாதுகாப்பும், பிறநாட்டு உறவுமேயாகும். அதன் நிரந்தரமான வருமானங்கள், சுங்கத் தீர்வை, அரசியல் தனி உரிமைகள், தபால் தந்தி ஆகியவற்றால் வருபவைகளேயாகும். சொத்துவரி, வருமான வரி தனிப்பட்ட அரசுக்கே உரியனவாகும். அன்றியும் தனித்த அரசுக்கு மத்திய அரசு தன் வருமானத்திலிருந்து இருபது முதல் நாற்பது சதவிகிதம் கொடுத்து உதவுகின்றது. இங்கோ அதற்கு மாறாக, இந்தியப்பேர் அரசின் பொருள் அமைச்சர் மாகாண அரசின் வருமானத்திற்கும் வரி விதிக்க வேண்டுமென்று சொல்லுகின்றார். என்னே! மாகாண சுய ஆட்சியின் மாயம்!

நாட்டின் விடுதலைக்காக மக்கள் தங்கள் அற்ப சுதந்தரத்தையும் பலிகொடுத்து விட்டனர். அந்நிய ஆட்சியில் நமக்கிருந்த சிற்றுரிமைகளும் பறிக்கப்பட்டு அவை தலைவர்கட்கு உரியனவாகிவிட்டன. இது பிறப்புரிமையை அபகரிக்கச் சட்டம் செய்ததாகாதோ?

இன்று மக்களை அடக்கி ஆளும் ஆட்சிக்கும், பண்டைக் காலத்தில் நீதிநெறியோடு கூடிய தமிழர் ஆட்சிக்கும் எவ்வளவு வித்தியாசம்! இதை இரண்டாயிரத்து அய்ந்நூறு ஆண்டுகட்குமுன் எழுதப்பட்ட குறள் முதலான தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணலாம். தமிழர் நாகரீகம் 6800-ஆண்டுகட்கு முற்பட்டதென்று சரித்திரக்காரர்கள் கூறுகின்றார்கள். எனவே தமிழ் இலக்கிய ஆராய்ச்சியுடையார் கருத்துக்கு இன்றுள்ள அரசியல் முறையும் சட்டங்களும் ஜனநாயகத்தைக்கெடுத்து நிந்தித்துப் பரிகசிப்பதாக முடியும்.

ஆதலால் 1935-ல் ஏற்பட்ட இந்தியக் கூட்டுஅரசாங்க அமைப்பில் கண்ட சாம்ராஜ்ஜியமே சமஸ்தானங்கட்கும் மாகாணங்கட்கும் ஏற்றதாகவும், நியாயமானதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும். எல்லாப் பொறுப்புகளையும் அதிகாரங்களையும் மத்திய அரசிடம் ஒப்புவிப்பது விவேகமோ முறைமையோ ஆகாது. அது கொடுமையாகும். எந்த சாம்ராச்சிய அமைப்பிலும் வரையறுக்கப்பட்ட பின் மிஞ்சின அதிகாரங்கள் மாகாணங்கட்கே உரியனவாகும். இதற்கு உதாரணமாக, அமெரிக்கா, ஆஸ்ரேலியா, சுவிஸ்லாந்து, தென் ஆபிரிக்கா முதலிய நாடுகளைக் குறிப்பிடலாம். இல்லையானால், மாகாணங்களின் உரிமையை மத்திய அரசு வரம்பு மீறி அபகரிக்க ஏதுவாகும். அதிகாரங்களை அரசுகள் தம் வயமாக்கிக் கொள்ளும் தன்மை மலிந்த இன்றைய நிலையில் ஒரு கட்சிக்காரர், அதாவது பொதுஉடைமைக்காரர், மத்திய அரசைக் கைப்பற்றினார்களானால் இப் பெருங் கண்டம் அப்படி ஒரு கட்சியின் கொள்கை அபிப்பிராயங்கட்கு உட்பட்டு தவிக்க வேண்டியதாகவன்றோ நேரும்.

இந்தியாவில் கல்வியில்லாத நிலையில் வயதைக்கொண்டு வாக்காளர் தகுதியை நிர்ணயித்து அவர்களைக் கேட்டு ஆட்சிபுரிவது மேலே குறிப்பிட்ட அபாயத்தை இன்னும் மிகுதிப்படுத்துவதாகும். கூடியவரை படிப்பும் அறிவும் பெரும்பாலும் அதிகமாக உள்ள பல மேல் நாடுகளிலும் கூட வயது வந்தவர்களெல்லாம் வாக்குரிமை பெற்று ஆட்சி புரியும் முறை நல்ல பலனைத் தரவில்லை. இந்தியாவில் கல்வியும், அரசியல் ஞானமும் இல்லாத மக்களை ஏமாற்றியும் வறுமையில் வாடும் நாட்டுப்புறத்தார்களைப் பணத்தால் வஞ்சித்தும் அவர்களை அரசியல் கலகக்காரர்கள் ஆட்டிவைக்க இம்முறை ஏதுவாகும். 'உலகமென்பது உயர்ந்தோர்மாட்டே நிகழ்ச்சி அவர் கட்டாகலான்' என்று எண்ணாயிரம் ஆண்டுகட்கு முன் தொல்காப்பியர் சொல்லியது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது.

ஷேக்ஸ்பியர் செருக்குடையோனை நன்கு வர்ணிக்கிறார்:—

சின்னஞ் சிறிய அதிகாரத்தை
அணியாய்க் கொண்டோன்
அறியாமை மிகலால்
தகாத வற்றையும்
தகுதியெனக் கொள்வன்
.........ஆ! பேராண்மையின்
பெருமைதான் என்னே
ஆனாலந்த வலிமையைக்
கடுமையாய்ச் செலுத்தல்
கொடுமையாகும்மே.

[குறிப்பு:—"வயதுவந்தோர்க்கு வாக்குரிமை" என்பது நூற்றுக்கு நூறு என்கிற எண்ணிக்கையை எட்டவேண்டுமென்பதுதான் நமது அழுத்தமான முடிவு. இதனாலுண்டாகும் தீமையினும் நன்மை பெரிது என்பதே நம் கருத்து. ஆ—ர்]

(●)

வாங்கல் டாக்டர் அம்பேத்கார் மாணவர் மன்றம்

திறப்பு விழா!

—(●)—

26—12—48-தேதி ஞாயிறு மாலை $6\frac{1}{2}$-மணிக்கு வாங்கல் ஆதித் திராவிட மாணவர்களின் "அம்பேத்கார் மாணவர் மன்றம்" திறப்பு விழா உயர்திரு வாளர் ம. சின்னக் கருப்பன் அவர்களின் தலைமையின் கீழ் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அவ்வமயம் தோழர்களான ஆ. பழனியாண்டி, ம. பிச்சைமுத்து, ஆ. பெரியசாமி, சி. மலையாளன், வா. ம. பிச்சைமுத்து முதலியோர்களால் விரிவான சொற்பொழிவுகள் நடத்தப்பட்ட பின் அம்மன்றத்திற்கு தோழர்களான பெ. ம. முத்துவேல் அவர்களைத் தலைவராகவும், வா. மொ. கோவிந்தன் அவர்களைச் செயலாளராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கடைசியாக தோழர் வா. மொ. மாரியப்பன் என்பவரால் வந்தனோபசாரம் கூறப்பட்டதுடன் குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டு விழா இரவு $11\frac{1}{2}$-மணிக்கு இனிது முடிவுற்றது.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

"எங்களுக்கு நீங்கள் தீங்கிழைக்க வில்லை! பகுத்தறிவைப் போதித்து விட்டீர்கள். கடவுள் நம்பிக்கையிலும் மூடப்பழக்க வழக்கங்களிலும் மற்றெல்லோரையும்விட உயர்ந்த குடும்பத்தாரென்ற கர்வத்திலும் மூழ்கிப் போயிருந்த எங்கள் குடும்பம் பகுத்தறிவு பெற்று விட்டது. மக்களுக்குள் வேற்றுமையை விளைவித்து அவர்களை சகோதரர்களாக — மனிதத்தன்மை உடையவர்களாக—வாழவிடாமல்செய்வது மதமும், அதனால் விளைந்த மூடநம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும்தான் என்பதை நாங்கள் உணர்ந்து கொண்டோம். நீங்களும் அதை உணர்ந்து கொள்ளவேண்டுகிறேன்" என்று பகுத்தறிவுப் பிரசங்கம் செய்தான் சோமசுந்தரம்.

"நம் இரு குடும்பத்தாரிடையே மீண்டும் நட்பு நிலவட்டும்" என்றார் அருணாசலம்.

"நட்பு நீடித்து நிலவ நான் ஒரு யோசனை சொல்கிறேன் கேளுங்கள். நம் பெண் பார்வதிக்கும் சோமசுந்தரத்திற்கும் கல்யாணம் செய்துவைத்து விட்டால்......"

ஜானகி முழுவதும் கூறுவதற்குள் அருணாசலம் தன் அபிப்பிராயத்தையும் தெரிவிக்க ஆரம்பித்தார். "சரியான யோசனைதான். எனக்கு ஆக்ஷேபனையே இல்லை. ஆனால், கல்யாணம் செய்து கொள்ளப்போகிறவர்களின் விருப்பத்தை நாம் தெரிந்து கொள்ளவேண்டுமல்லவா?"

"நம் அபிப்பிராயத்தை யெல்லாம் கேட்காமல், சண்டைக்கு முன்பே அவர்களிருவரும் கல்யாண விஷயத்தில் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள்! ஆகவே, இப்போது அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற அவசியமே இல்லை!" என்றாள் ஜானகி.

* *

பகுத்தறிவு உணர்ச்சி பெற்றதால், சோமசுந்தரம்—பார்வதி திருமணம் புரோகிதமில்லாத் திருமணமாக—சுயமரியாதைத் திருமணமாக—ஆடம்பரமின்றி நடைபெற்றது, வெகு விரைவிலேயே. அந்தத் திருமணத்தின் போது, தமிழ் நாட்டிற்குப் பகுத்தறிவை ஊட்டிய பெரியாரின் சீர்திருத்தக் கருத்துகள் பரிமாறப்பட்டன, வந்திருந்த விருந்தினருக்கு. அதன் விளைவாக, தேவியின் பிரசாதத்தை முதலில் யார் வாங்குவது என்ற சச்சரவு இதுவரை எழவேயில்லை!

போட்டிக் கதைகளுக்குத் தீர்ப்பளித்தோர்!

★

● எமது வேண்டுகோளுக் கிணங்கி இரண்டாம் பருவச் சிறு கதைப் போட்டிக்குத் தீர்ப்பளித்தோர் விபரம் இங்கு தரப்பட்டிருக்கிறது.

● தனித் தாள்களில், கார்டுகளில் குறித்தனுப்பப்பட்ட தீர்ப்புகளை இங்கு எடுத்துக்கொள்ளப் படவில்லை. நாள் கடந்து வந்தனவும் தள்ளப்பட்டு விட்டன. [எடுத்துக் கொண்டாலும் இப்போதைய உங்களின் தீர்ப்பை அவை பாதிக்கவில்லை.] குடி அரசு வாக்குச் சீட்டுகளில் கையெழுத்திட்டிருப்பவர்களே இவர்கள்.

● போட்டியில் ஒத்துழைத்த எல்லாத் தோழர்களுக்கும் தோழியர்களுக்கும் எமது பணிவான வணக்கமும் நன்றியுமுரித்தாகுக.

(ஆ-ர்.)

1. சென்னை கு. மீ. சுந்தரம் பி. ஏ., கோடம்பாக்கம் பி. ஜோசப், சேத்துப்பட்டு மா. பொ. தமிழரசன், மேல்வள்ளம் எம். அண்ணாமலை, திருமழபாடி எம். எம். வைத்திலிங்கம், திருநெல்லிக்காவல் பி. அருளானந்தசாமி, கொளும்பு டாக்டர் டி. ஆர். தம்பையா ஆக 7.

2. சென்னை டி. சொக்கலிங்கம், அகரம் பெரம்பூர் எஸ். கே. சாமி, தஞ்சாவூர் டி. என். முருகேசன், எஸ். நாராயணசாமி, க. கருணாநிதி, ஓ. வி. நாகராஜன், கும்பகோணம் நா. ரெங்கசாமி, கண்ணம்பாடி ஜி. நடேசன், மன்னார்குடி ஏ. கோவிந்தராசு, நீடாமங்கலம் பி. சுப்பையன், எஸ். சண்முகம், பி. நடராசன், சோனாபேட்டை எஸ். அண்ணாமலை, ஆண்டிப்பந்தல் எம். கருணாகரன், ராஜப்பையன் சாவடி டி. சுப்பையா, பெரம்பூர் கோ. துளசி அம்மாள், திருச்சி கே. ஆறுமுகம், எம். சுந்தரம், எஸ். ஏ. சாரங்கபாணி, உறையூர் எம். கண்ணன், வழுவூர் அம்மாப்பேட்டை எம். செங்கமலம், கொழும்பு பழ. கருப்பையா, ஆர். வேலை அய்யா ஆக 23

3. புரசைவாக்கம் ஏ. பி. டி. மூர்த்தி 1.

4. உரிகம் டி. எம். தங்கராசு, அச்சுவேலி (யாழ்ப்பாணம்) சி. செல்வத்துரை, எல்பிட்டியா

2ம் பருவப் போட்டியில் கதை எழுதியவர்கள்

1. யார் குற்றவாளி?
தோழர் ரவி, மதுரை.
2. விவேகமறிந்த வீரனின் மனைவி.
தோழர் டி. வி. இராமசிவம், பெரம்பூர்.
3. முழங்கால் பைத்தியம்.
தோழர் களையழகன், பூனா.
4. பிரிந்தது குற்றமா?
தோழர் பொ. துரைசாமி திருச்சி.
5. லட்சியவாதி!
தோழர் பி. பார்த்தசாரதி, தூத்துக்குடி.
6. சவக்குழி!
தோழர் இரா. க. நாகராசன், திருமலைராயன்பட்டினம்.
7. விதவையின் கடிதம்.
தோழர் ஆர். வி. பார்த்தசாரதி, ராசிபுரம்.
8. பதிவாளன் பாலன்.
தோழர் சிந்தனைப்பித்தன், சேலம்.
9. கதை கண்ட கற்கள்.
தோழர் இராவணன், மதுரை.
10. தாசி.
தோழர் சீலன், மதுரை.
11. கொலைக் குற்றவாளி.
தோழர் வேலன், பாபநாசம்.
12. அவளும்—நானும்.
தோழர் புத்ததாசன், துறையூர்.
13. சந்நியாசி.
தோழர் கி. இராவணன், திருமலைராயன்பட்டினம்.

[சிலோன்] செ. முத்துமாலை, கொழும்பு சி. சங்கரலிங்கம் ஆக 4.

5. சென்னை ஆயிரம் விளக்கு மு. கிருஷ்ணசாமி, மேலணிக்குழி ஏ. சுப்பிரமணியன், என். மலைக்கொழுந்தன், மதுரை எஸ். ராஜம்மாள், அருப்புக்கோட்டை மு. மீ.

சீனிப்பாண்டியன், தூத்துக்குடி ஏ. ஏஸ். புஷ்பம்ஞானசுந்தரி அம்மாள், கான்பூர் சி. ராமசாமி, கொழும்பு கே. ஒய். இளஞ்செழியன் ஆக 8.

6. கருவூர் தனமனோகரன், கொந்தகை எஸ். ருத்திராபதி, வே. புதூர் எஸ். ஏ. முத்தையா, காரைக்கால் மு. சுப்புராயனுஆக 4.

7. புரிசை வி. இராமலிங்கம், கும்பகோணம் சு. துரைப்பாண்டியன், திருமலாபுரம் டி. எஸ். சுப்பய்யா, நாமக்கல் அ. ஆருன்ரசித், நல்லணக்கவுண்டன்புதூர் வே. நாச்சிமுத்து, குண்ணூர் வி. கே. நூர், புதுச்சேரி எம். ஜே. தெலா குருவா, ஆக 7.

8. விழுப்புரம் தி. வை. நாதன், கரூர் எஸ். நடேசன், திருச்சி ரா. ராகவன், கோபாலகிருஷ்ணன், எம். சம்பந்தன், உறையூர் ஏ. பாக்கியம், திண்டுக்கல் டி. உமாபூன், அம்பாசமுத்திரம் தி. இரங்கசாமி, சேலம் கிச்சிப்பாளையம் ம. ராமசாமி, நாமக்கல் சா. வையாபுரி, ஓமலூர் குப்புராசு, மேட்டூர் அணை செ. முத்துசாமி, சேலம் குகை கண்ணகி, ராபர்ட்சன்சூர் பேட்டை என். ஆறுமுகம், வி. எம். பி. ஆறுமுகம் ஆக 15.

9. சென்னை அரசு, கள்ளிப்பட்டி ப. கு. இராமசாமி ஆக 2.

10. சென்னை என். ராமதிலகம், ஆரணி கே. பி. சுந்தரம், பூட்டுத்தாக்கு மா. சி. சுதன், கொமாரபாளையம் ஏ. ராஜகோபால், சிங்கம்புணரி, பி. எஸ். பர்வதம், தூத்துக்குடி ரா. ரத்தினசாமி, கொழும்பு வி. சங்கர், ஜி. செபஸ்டியன், மராடானா (கொழும்பு) எஸ். மோஹன் ஆக 9.

11. சென்னை. மு. இரத்தினசாமி, ராயப்பேட்டை எம். சீனிவாசன், மணமேடு கே. கோவிந்தன், பண்டாரவாடை கே. ஏ. முஹம்மத் ஹாஸன், எம். சுப்ரமணியன், நாகூர். டி. தங்கராசு, கும்பகோணம் சண்முகம், வ. கேசவன், மா. வடிவேலு, பாபநாசம் எல். சம்பந்தம், அரங்கபாளையம் செந்திவேல், திருச்சி ஆர். உமாபதி, காரைக்குடி எஸ். சிவநேச பாண்டியன், தூத்துக்குடி கா. புகழேந்தி, ராஜகிரி டி. நாகராசன், எம். ஏ, ராஜா முகமத், தீபம்மாள்புரம் எம். ரத்தினம் ஆக 17.

12. புதுப்பாளையம், பி. ஆர் குப்புசாமி, கும்பகோணம் கே. ஜி. கலந்தர்ஷரீப், தஞ்சாவூர் பி. சி. பி. நாதன், சுங்கம்பட்டி என். எஸ். ராமசாமி, சோபனபுரம் எஸ். டி. சீனிவாசன், தூத்துக்குடி ஆர். ரெங்கசாமி, பாயின்ட் பெட்ரோ கந்த முருகேசன், கொழும்பு கே. பி. எம். அழகேஸ் ஆக 8.

13. பெரிய காஞ்சிபுரம். ஏ. எஸ். கோவிந்தராஜ், வேளுக்குடி ஜி. டி. சந்திரசேகரன், பொறையாறு ந. துரைராஜ், நாகை எஸ். பாலயான், மு. சுப்பையன், நாகூர் ச. க. சுப்பிரமணியன், மா. வைத்திநாதன், குடந்தை ஏ. கே. கணேசன், என். ராமு, திருமலைராயன் பட்டினம் ச. அய்யாக்கண்ணு, சு. ஆடியபாதம், பெரம்பூர் ஜே. கோவிந்தசாமி, கொழும்பு என். பி. நடராசன், ஸ்பிரிங்வலி ஏ. எம். சின்னையா ஆக 14.

[3ம் பக்கத் தொடர்ச்சி]

லீஸ், பியூன், முதலியார், இராஜன்.

கதை அமைப்பு:- [இராஜன் மீது, பிளாக் மார்க்கட் பேரம் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுப் போலீஸில் ஒப்படைக்கப்படுகிறான்.]

விஸ்வன்:- [அலுவலகத்தில் அமர்ந்து ஏதோ கணக்குப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறான்]

இரஞ்சன் & இராகவன் :- குட்மார்னிங் பிரதர்! குட்மார்னிங்!!

விஸ்வன்:-குட்மார்னிங், குட்மார்னிங்! ஏது திடீர்ப்பிரவேசமாக இருக்கிறதே! ஏதாகிலும் விசேஷம் உண்டோ?

இரஞ்சன்:- விஸ்வா! உனக்கு விஷயமே தெரியாதோ...?

இராகவன்:- என்னப்பா! விஸ்வாவைப் பார்த்தாலே, விஷயந் தெரியாதவரென்று புரியவில்லையா...?

விஸ்வன்:- என்ன விஷயம்...?

இரஞ்சன்:- எல்லாம் ராகவனையே கேள்!

இராவகன்:- அடே! நீதானேப்பா நேரிலேயே பார்த்து விட்டு வந்தவன்; நீ சொன்னாத்தானே விவரமாக இருக்கும்!

விஸ்வன்:- ரஞ்சா! நீ என்னப்பா பார்த்தே சொல்லித்தான் தொலையேன்!!

இரஞ்சன்:- இப்போ...! சப் இன்ஸ்பெக்டரைக் கூட்டிக் கொண்டு இங்கே வர, ஆடிட்டர் ய்யா ஸ்டேஷனுக்குப் போயிருக்கிறார்.

விஸ்வன்:- ஏன்! என்ன காரணம்?

இராகவன்:- உனக்கு யாரப்பா குமஸ்தாவாக வாய்த்தது? பிளாக் மார்க்கட்டில் விற்ற நூல் பேல்களை அப்படியே படம் பிடித்தாற் போல் கணக்கெழுதி வைத்திருக்கிறானாமே...?

இரஞ்சன்:- யாரப்பா அந்தப் பிரகஸ்பதி...?

விஸ்வன்:- மடப்பயல் ராஜனாகத்தான் இருக்கவேண்டும்! சரி. பூரா விஷயத்தையும் சீக்கிரம் சொல்லுங்கள் ஏதாகிலும் ஏற்பாடு செய்யலாம்!

இரஞ்சன்:- அதுதானப்பா! நம்ம 'லேட்டஸ்ட் பிளாக் மார்க்கட் பேரமில்லை? இரண்டு லட்சம்! அது விஷயமாகத்தான்!!

விஸ்வன்:- அடடே...! அதுவா? அந்தக் கணக்கு ராஜன் கைக்கு எப்படிக்கிடைத்தது? இன்னும் நமக்குள்ளாகவே கணக்குத் தீர்த்துக் கொள்ளவில்லையே...?

இராகவன்:- அதுதானே எங்களுக்கும் ஆச்சரியமாக இருக்கிறது? அதைப்பற்றி ராஜனிடம் விசாரித்தாலல்லவா விளங்கும்?

விஸ்வன்:- [அழைப்பு மணியை அடிக்கிறான்.]

பியூன்:- [உள்ளே வந்து நிற்கிறான்.]

விஸ்வன்:- 'ஹெட்கிளார்க்' கை வரச்சொல்.

பியூன்:- [செல்கிறான்]

இராஜன்:- [உள்ளே வந்து நிற்கிறான்.]

விஸ்வன்:- கணக்குப் புத்தகங்களெல்லாம் ஆடிட்டர் ஆபீஸிலிருந்து திரும்பி வந்து விட்டனவா?

இராஜன்:- இன்னும் அவைகள் வந்து சேரவில்லையே!

விஸ்வன்:- இரண்டு லட்ச ரூபாய்க்கு நூல்பேல்கள் விற்பனையான விவரம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா?

இராஜன்:- இல்லை!

விஸ்வன்:- அந்நூல் பேல்களின் 'ஸ்டாக்' விபரம் உனக்குத் தெரியுமா?

இராஜன்:- எனக்குத் தெரியாததினால்தான் கணக்குகளைப் பரிசோதிக்குமாறு ஆடிட்டர் ஆபி

ரோஜா முத்தையா

ஸுக்கு அனுப்பி வைத்தேன்.

விஸ்வன்:- விற்றுமுதலான விவரம் உனக்கெப்படிக் கிடைத்தது?

இராஜன்:- தாங்கள் கொடுத்த 'பைல்புக்கில்' தான் அவைகள் இருந்தன.

இரஞ்சன்:- அதை ஏனப்பா 'பைல்புக்கில்' வைத்துத் தொலைத்தே?

விஸ்வன்:- 'ஷட்டப்' நீ பேசாதிருப்பா! [மீண்டும் ராஜனை நோக்கி] அதே 'பைல்புக்கில்' தானே 'ஸ்டாக்' விவரமும் வைத்திருந்தேன்! அது எங்கே? தொலைத்து விட்டாயா? அல்லது இரண்டு லெட்சத்தையும் அபேஸ் பண்ணத்திட்டம் போட்டிருக்கிறாயா....?

முதலியார்:- [ஆடிட்டர், சப் இன்ஸ்பெக்டர், போலீஸ் சேவகர்களோடு அங்கு வருகிறார்.]

விஸ்வன்:- [முதலியாரை நோக்கி] மாமா! இந்தத் திருட்டுப் பயலை நீங்கள்தானே வேலையில் வைத்துக் கொள்ளுமாறு சிபார்சுக் கடிதம் எழுதிக் கொடுத்தீர்கள்? இவனுடைய பொறுப்பிலிருந்த இரண்டு லட்சம்ரூபாய் பெறுமானமுள்ள நூல்பேல்களையுங் காணோம்! அதற்குரிய ஸ்டாக் விவரத்தையும் காணோம்!!

முதலியார்:-சப் இன்ஸ்பெக்டர் சார்! முதலில் அவனை 'அரஸ்ட்' செய்யுங்கள்! அயோக்கியப்பயல்!! அவனை நம்பி ஏனப்பா அவ்வளவு பெருந்தொகைப் பொருளை ஒப்படைத்தாய்? அவன் அவைகளைத் திருட்டுத்தனமாகப்பிளாக் மார்கட்டில் விற்று விட்டான் என்று ஆடிட்டரும், போலீசாரும் கண்டு பிடித்து விட்டனர்! நீயும் நல்ல வேளையாக இங்கேயே அவனைப் பிடித்து விசாரித்துக்கொண்டிருக்கிறாய்!

இராஜன்:—என்ன? நானா திருட்டுத்தனமாக வியாபாரம் செய்தேன்? அபாண்டம்! அநீதி!! அக்கிரமம்!!! முதலியார்வாள்! தயவு செய்து ஆடிட்டரிடமுள்ள 'பைல் புக்கை' வாங்கிப் பாருங்கள்! உண்மை விளங்கும்!!

ஆடிட்டர்:-[கொஞ்சம் தயக்கத்துடன்] அந்த......'பைல் புக்'கிலுள்ள குறிப்புகளிலெல்லாம்...... இராஜனின் கையெழுத்துக்களே... இருப்பதால்! இந்த விஷயத்தில் இராஜன்தான் ஈடுபட்டிருக்கவேண்டும் என்பதில் ... கொஞ்சமும் .... சந்தேகமே...இல்லை!

சப் இன்ஸ்பெக்டர்:-[ராஜனை நோக்கி] மிஸ்டர் ராஜன்! நீர் குற்றவாளியல்லவென்று நிரூபிக்கப் படுகிற வரையில், உம்மைக் காவலில் வைக்கவேண்டியது என் கடமை!—டேய் 1949! இவரைக் கைது செய்து ஸ்டேஷனுக்குக் கொண்டு போ!!—

மிஸ்டர் விஸ்வம்! உங்கள் 'ஸ்டேட்மென்ட்''டைத் தயார் செய்து ஸ்டேஷனுக்கு அனுப்பி வையுங்கள்!!! நான் வருகிறேன்.

[என்று கூறி இராஜனைக் கொண்டு செல்லும் போலீஸோடு போகிறார்]

முதலியார்:-விஸ்வா! இனிமே இம்மாதிரிப் புது ஆட்கள் யாரும் நம் மில்லாபீசுக்கு வேண்டியதில்லை. இப்போ ராஜன்மீது குற்றத்தை ருசுப்பிக்கவேண்டிய ஏற்பாடுகளைச்செம்மையாகச்செய்து முடித்து விடு. நான் போய் வருகிறேன்.

விஸ்வன்:-ஆகட்டும் மாமா.

ஆடிட்டர்:-[முதலியார் போன பிறகு] விஸ்வா! நானில்லாவிட்டால், உன் கதி என்னவாயிருக்கும் தெரியுமா?

இராகவன்:-நீங்கள் ஏன், சார்! அப்படிப் பயந்து கொண்டே சொன்னீர்கள்? தைரியமாக ஒரு போடு போடவேண்டியதுதானே! சப் இன்ஸ்பெக்டரும் நம்ம கையாள்தானே...!!

இரஞ்சன்:-சரி. அதெல்லாங் கிடக்கட்டும்! விஸ்வா! அந்த இரண்டு லெட்சத்தையும் பங்கு போட்டுக் கொடுத்துவிடேன்!!

விஸ்வன்:- கொடுக்காமல் நான் ஒருவனேவா எடுத்துக்கொள்ளப் போகிறேன்...? ராஜன் தண்டனை பெறும் வரையில் பொறுத்துக் கொள்ளக் கூடாதோ? அந்த இன்ஸ்பெக்டர் ரொம்பப் பொல்லாதவனப்பா! பணத்தை வாங்கிய பிறகு கூட நம்மையே மாட்டி வைத்தாலும் வைத்துவிடுவான்...

ஆடிட்டர்:- ஆமாங்க சார்! உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள்! இப்போ ஒன்றும் அவசரமில்லை!

இரஞ்சன்:- நான்மட்டுமென்ன! அவசரப்பட்டேனா? ஏதோ! இந்தக் கணக்குத் தீர்ந்தால் மறு கணக்குப் போடலாமே என்று பார்த்தேன்.

இராகவன்:- முதலில் இந்த வழக்கில் தப்பித்துக்கொண்டுகணக்கெல்லாம் ஒழுங்காகத் தீர்த்துக் கிட்டியானால், அதுவே போதும்!

விஸ்வன்:- பணத்துக்காக ஒருவரும் பயப்பட வேண்டாம்! பணம் எங்கேயும் போகாது!! அதற்கு நான் இருக்கிறேன்!!! உம், ராஜன் தண்டிக்கப்பட்டதும், வழக்கும் ஒழியும், பயமும் தீரும். பணத்தையும் நாம் பகிர்ந்துகொள்ளலாம். ஏன்...? எல்லோருக்கும் சம்மதந்தானே?

மூவரும்:- ஊம்! சரி, சரி அப்படியே செய்வோம்.

சங்க இலக்கியப் பேச்சுகள்!

(●)

தோழர் சி. இலக்குவனாரின் தனி முயற்சியால் கீழ்க்கண்ட இடங்களில், கீழ்க்கண்ட நாட்களில் நடைபெற்றன.

26-12-48	திருநெல்வேலி
27-12-48	வீரவநல்லூர்
28-12-48	கல்லிடைக்குறிச்சி
29-12-48	கீழ்ப்பாவூர்
30-12-48	தென்காசி
31-12-48	விக்கிரமசிங்கபுரம்

இனி நடக்கவிருப்பவை:—

1-1-49	சிவகிரி
2-1-49	மம்சாபுரம்
3-1-49	சிவகாசி
4-1-49	விருதுநகர்
5-1-49	ஆலங்குளம் (சாத்தூர்)
7-1-49	புதுவயல்
8-1-49	இராங்கியம்
10-1-49	பெரியகுளம்.

அறிஞர் அண்ணாதுரை.

ரோமாபுரி ராணிகள்	2	4	0
கம்பரசம்	1	8	0
குமரிக்கோட்டம்	1	0	0
விடுதலைப்போர்	1	0	0
கற்பனைச்சித்திரம்	1	0	0
சிறுகதைகள்	1	0	0
ஆரியமாயை	1	0	0
உலக பெரியார் காந்தி	1	0	0
ரேடியோவில் அண்ணா	0	12	0
வர்ணாஸ்ரமம்	0	12	0
ஏ தாழ்ந்த தமிழகமே	0	8	0
திராவிடர் நிலை	0	6	0
நாடும் ஏடும்	0	6	0
மே தினமும் திராவிடர் கழகமும்	0	5	0
நல்ல தீர்ப்பு	0	4	0
மகாத்மா காந்தி	0	3	0

விற்பனை உரிமையாளர்

நாதன் கம்பெனி லிமிடெட்,

கச்சேரி வீதி, ஈரோடு.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சந்திர கிரகணத்துக்கும் விடுமுறையளிப்பதென்றால், சர்க்காரே மக்களை, சந்திரனை ராகு விழுங்குவதால் ஏற்பட்ட தோஷத்தை நீக்க நீரில் மூழ்கி தர்ப்பணம் செய்யுங்கள் என்று கூறுவது போலாக வில்லையா? மதுவிலக்குச் சர்க்கார் மதிவிலக்குப் பணியிலும் ஈடுபட்டு விட்டது போல் தோன்றுகிறது, மதிதுலக்கு முயற்சியில் இறங்கா விட்டாலும்!

சூரியன், சந்திரன் இவற்றிடையே பூமி ஆகிய மூன்றும் ஒரு நேர் கோட்டில் சந்திக்கும்படியான நிலை ஏற்படும் பொழுது சந்திர கிரகணம் ஏற்படுகிறது, என்ற பாடங்களைக் கொண்ட புத்தகங்களை மாற்றி, மேனாட்டு விஞ்ஞானம் அஞ்ஞானத்தை வளர்க்கிறது, ஆகவே கீழ்நாட்டு மெய்ஞ்ஞான போதனையையே புத்தகங்களில் பாடமாகக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு வந்தாலும் வரலாம், ஆச்சரியப்படுவதற்கு இல்லை. காரணம் இந்நாட்டின் அரசியல், சனாதனிகளிடம், மடவாசிகளிடம் சிக்கி விட்டதேயாம். இந்த லட்சணத்தில் இந்த சர்க்கார் மதச்சார்பற்றது என்று வேறு பிதற்றுகிறார்கள். அதேபோழ்து ஆச்சாரியார் பூர்ண கும்பம் பெற்றுக் கொள்கிறார், சேது வேத பாராயணத்துக் கிடையே கப்பலைச் செலுத்துகிறார், ஓமந்தூரார் கம்பராமாயணத்தின் சார்பாகக் கதறுகிறார். நீர் கலந்த பாலை ஊற்றி விட்டு நீர் கலக்கவேயில்லையென ஒரேயடியாக அடித்துப் பேசும் பால்காரனைப் போல, தினந் தினம் மதச்சடங்குகளைச் செய்தாலும், மதத்தை வளர்க்கும் செய்கையில் பகிரங்கமாக ஈடுபட்டாலும் வாயில் உச்சரிப்பது "இது மதககலப்படமில்லாத சர்க்கார்"

இந்த நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும் காண முடியாது இந்த அதிசயத்தை. பூணூல் போட்டுக் கொள்ள ஓர் நாள், எண்ணெய் முழுக்கிட்டு வாணத்தை வாங்கிக் கொளுத்த ஓர் நாள், வைகுந்தம்செல்லப் பட்டினி கிடப்பதாகச் சொல்லி பலகாரத்தைத் திணிக்க ஓர் நாள், மாட்டைக் கும்பிட, சந்திரனுக்கு ஏற்பட்ட தோஷத்தைப் போக்கிக் குளிக்க, ஆற்று நீரில் எள்ளைக் கரைக்க ஒவ்வொரு நாள், ஆயுதங்களை முடக்கிப் போட்டு அவைகளைக் கும்பிட மூன்று நாட்கள் என்று விடுமுறைஅளிக்கும் சர்க்காரை வேறெங்கும் காண இயலாது. ஓய்வு நாட்கள் அதிகமென்று நான் சொல்ல வரவில்லை. அவைகள் கொடுக்கப்பட்டிருக்கும் அடிப்படைக்கருத்து அறிவுக்கு விலங்கிடுகிறது என்பதற்காகத் தான் கண்டிக்கப்பட வேண்டியதாகிறது. அர்த்தமற்ற ஒன்றினைக்கொண்டாட லீவ் விடும்பொழுது அதற்கு மதிப்பு உயர்கிறது, முக்கியத்துவம் ஏற்பட்டு விடுகிறது.

இந்த வழியில் அரசாங்கம் சென்று கொண்டிருந்தால், இந்த நாட்டின் கேவல நிலைக்கு மூலகாரணமாகிய, மக்களின் பூஜா மனோபாவம் மாறி பகுத்தறிவு பரவ வழியுண்டா என்பதை மக்கள், குறிப்பாக இளைஞர்கள் சிந்திக்கவேண்டும். அரசாங்கத்தைப் பஞ்சாங்கப் பிடியிலிருந்து அகற்ற வேண்டும். ஏனெனில் நாட்டினது கேட்டினைக் களையும் பணிக்கு அரசாங்கம் பெரும் அளவில் பொறுப்பாளியாகும்.

—இரா. கோ. கிருஷ்ணன்.

அதிகாரிகளின் மிருகச் செயலுக்குக்கண்டனம்.

பள்ளிபாளையத்தில்

டிச 21.

பெரியாரவர்களும் மற்றவர்களும் கைதாக்கப்பட்டு, அதிகாரிகள் மிருக வெறிகொண்டு தடியடி நடத்திய தர்பாரைக் கண்டிக்க இன்று இரவு 7-மணிக்குத் தோழர் எஸ். வி. பி. வெங்கட்டராமன் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்களான பி. சண்முகவேலாயுதன், அப்பாவு, சுப்பய்யன், பெருமாள் முதலியோர் பேசினார்கள்.

செயலாளர் நன்றி கூற இரவு 10-மணிக்குக் கூட்டம் முடிந்தது.

* *

நாகையில்

டிச. 21-

இன்று நகரில் கடையடைப்பு. 200க்கு மேற்பட்ட தொண்டர்கள் எதிர்ப்பொலி முழக்கிக் கருப்புடையுடன் ராயல் இல்லத்திலிருந்து ஊர்வலமாக வர அறிவுத்திடலில் வழக்கறிஞர் விசயராகவலு தலைமையில் 6 மணிக்குக் கூட்டம் நடைபெற்றது. தோழர்களான ஆர். வி.கோபால், ஆறுமுகம், கிருட்டினன், இராதாமணாளன், கிருட்டினானந்தா முதலியோர் அடக்குமுறையைக் கண்டித்துப் பேசினர். குடந்தை, கோவில்பட்டிச் சம்பவங்கள் குறித்து 2 கண்டனத் தீர்மானங்கள் நிறைவேறியபின் 10 மணிக்கு இனிது முடிந்தது.

ஈரோட்டில்

26—12—48ல் தோழர் ஜக்கிரியா அவர்கள் தலைமையில் நேதாஜி வீதி முனையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்களான பெருமாள், அப்பாவு, மாணிக்கம், சண்முகவேலாயுதன் முதலியோர் சர்க்காரின் அடக்குமுறையைக் கண்டித்துப் பேசினர்.

குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

தத்துவவிளக்கம்	0	12	0
இந்தியாவின் குறைபாடுகள்	0	8	0
பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்)	0	8	0
நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா?	0	6	0
கர்ப்ப ஆட்சி	0	6	0
பெரியார்பெருந்தொண்டு	0	6	0
வெளியேறு	0	6	0
பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம்	0	4	0
மதப்புரட்சி	0	4	0
வால்டையரின் வாழ்க்கைச் சரிதை	0	4	0
கார்ல் மார்க்ஸ்	0	4	0
சமதர்ம உபன்யாசம்	0	4	0
அப்பரும் திருஞான சம்பந்தரும்	0	3	0
சோஷியலிசம்	0	3	0
இலங்கை உபன்யாசம்	0	3	0
இராமாயணப் பாத்திரங்கள்	0	3	0
மேல்நாடும், கீழ்நாடும்	0	3	0
உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை?	0	3	0
இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து!	0	2	0
இதிகாசங்கள் புகட்டும் நீதி	0	2	0
உண்மைத் தொழிலாளி யார்?	0	2	0
திருச்சிப் பிரசங்கம்	0	2	0
ராமலிங்க சுவாமி பாடல்	0	2	0
திராவிடர்-ஆரியர் உண்மை	0	2	0
தமிழ் இசை-நடிப்புக் கலைகள்	0	1	0

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,

கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE